செந்தமிழ்ச் செல்வி

426

திங்கள் வெளியீடு

/42
1-MAR 1956
MADRAS
N35.13.5
199652

தனிப் பிரதி விலை அணா 4
ஆண்டுக் கையொப்பம் ரூ. 2—8

ஓம்

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு கக	பவ ஆண்டு மார்கழித் திங்கள் 1934௵ டிசம்பர்௴ — 1935௵ ஜனவரி௴	பரல் ரு

செந்தமிழ்ச் செல்வி

இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்

(Editorial Board Members)

தலைவர்

1. திருவாளர் M. V. நெல்லையப்ப பிள்ளையவர்கள், B. A.,
பென்ஷன் தாசில்தார், சிந்துபூந்துறை.

---

2. ,, கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள், M.A., M.L.,
தலைவர், மணிவாசக மன்றம், திருநெல்வேலி.

3. ,, பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்,
தமிழாசிரியர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சிதம்பரம்.

4. ,, துடிசைக்கிழார் சிதம்பரனாரவர்கள்,
போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர், திருவாரூர்.

5. ,, பண்டிதமணி. மு. கதிரேசச் செட்டியாரவர்கள்,
தமிழாசிரியர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சிதம்பரம்.

6. ,, T. S. கந்தசாமி முதலியாரவர்கள், B. A ,
வழக்கறிஞர், சாத்தூர்.

7. ,, ஆ. கார்மேகக் கோனாரவர்கள்,
தலைமைத் தமிழாசிரியர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

8. ,, வித்வான் பு. சி. புன்னைவனநாத முதலியாரவர்கள்,
தலைமைத் தமிழாசிரியர், செயிண்ட்சேவியர் காலேஜ், பாளையங்கோட்டை

9. ,, அ. மு. சரவண முதலியாரவர்கள்,
தமிழாசிரியர், அரியலூர்.

10. ,, காழி. சிவ. கண்ணுசாமி பிள்ளையவர்கள், B. A.,
தருமபுராதீன வித்துவான், சென்னை.

பொருளடக்கம்

டாக்டர் மில்லர் (முகப்புப் படம்)

சுந்தரமூர்த்தி அடிகள் தேவாரம் உரை கசுரு

திருஞான சம்பந்த அடிகள் தேவாரம் உரை
மா. வே. நெல்லையப்ப பிள்ளை, பி.ஏ. கசுஎ

சிவஞான போதக் கருத்து
மா. வே. நெல்லையப்ப பிள்ளை, பி.ஏ. கசுகூ

மும்மையா லுலகாண்ட மூர்த்தி
T. P. மீனாட்சிசுந்தரம் பிள்ளை உ0ரு

செந்தமிழ்த் திருமந்திரம் இள முருகனார் உ0சு

நெடுங்கணக்கு (அரிவரி)
பண்டித. ஞா. தேவநேயப் பாவாணர் உகக

குறுந்தொகை மூலமும் விளக்க உரையும்
இரா. சிவ. சாம்பசிவன் உகச

உளநூல் மா. பாலசுப்பிரமணியம், எம். ஏ. உகஅ

கார் நாற்பது—ஆங்கில மொழிபெயர்ப்பு
T. B. கிருஷ்ணசாமி முதலியார், M. A., B. L. உஉரு

திருத்தணிகைப் பிள்ளைத்தமிழ்
வ. சு. செங்கல்வராய பிள்ளை, எம். ஏ.

An Appreciation - மதிப்புரை
T. சிவராம சேதுப் பிள்ளை. எம். ஏ., பி. எல். உருக

டாக்டர் மில்லர் வரலாறு
பு. க. முத்துசாமிப் பிள்ளை உருச

திருப்புகழ்ப் பதிப்பிற்கண்ட தலமாறுதல்கள்
கு. குமாரசாமிப் பிள்ளை உருஎ

செய்திகளும் குறிப்புகளும் உசஉ

இணைப்பு:—

தமிழ்த் தோற்றத் தேற்றம் T. S. கணேசபிள்ளை

டாக்டர் மில்லர்

சிலம்பு-கரு.] பவ—மார்கழி [பரல்-ரு

சுந்தரமூர்த்தி அடிகள் தேவாரம்

வஞ்சமற்ற மனத்தாரை மறவாத பிறப்பிலியைப்
பஞ்சிற்சீ றடியாளைப் பாகம்வைத் துகந்தானை
மஞ்சுற்ற மணிமாட வன்பார்த்தான் பனங்காட்டூர்
நெஞ்சத்தெங் கள்பிரானை நினையாதார் நினைவென்னே,

பதவுரை :—

வஞ்சமற்ற மனத்தாரை—பொய்மை பொருந்திய, நிலையில்லாத உலக வாழ்வுப் பற்றினைவிட்டு முற்றிலும் நீங்கிய உள்ளத்தினை யுடைய மெய்யடியார்களை,

மறவாத பிறப்பிலியை—எப்பொழுதும் நினைந்து (அவர்களுடைய உள்ளத்தில் அருட் பேரொளியாய் விளங்கிக்கொண் டிருக்கும்) பிறப்பு இறப்பு இன்றி என்று முள்ளவரும்,

பஞ்சிற் சீறடியாளைப்பாகம் வைத்துகந்தானை—(உயிர்களுக்கு அருள் செய்யும் வண்ணம்) பஞ்சுபோல மெதுவான சிறு அடிகளை யுடைய உமாதேவியாரை இடப் பாகத்தில் வைத்து மகிழ்ந்து வீற்றிருக்கிறவனும்,

மஞ்சுற்றமணி மாடம்—மேகங்கள் தவழும்படி உயர்ந்திருக்கிற அழகிய மேடை வீடுகளை உடைய,

வன்பார்த்தான் பனங்காட்டூர்—திருவன்பார்த்தான் பனங்காட்டூர்ப் பதியில் திருக்கோயில் கொண்டிருக்கிற,

எங்கள் பிரானை—அடியார்களாகிய எங்களுக்கு முழுமுதற் றலைவனுமாகிய சிவபெருமானை,

நெஞ்சத்து—தங்களுடைய உள்ளத்தில்,

நினையாதார் நினைவு என்—தங்களுக்கும் அவனுக்குமுள்ள அத்துவிதத் தொடர்பையும், அதுபற்றித் தங்களுக்கு அவன் செய்துவரும் அருட் செயலையும் நினையாதவர்களுடைய நினைப்பு என்ன பயனைச் செய்யும்? (ஒரு பயனும் செய்யாது என்றபடி.)

விளக்கவுரை :—

வஞ்சம் அற்ற மனத்தாரை மறவாத பிறப்பிலியை—வஞ்சம்=பொய்; நிலையின்மை. உலகவாழ்வானது ஒரு தன்மைத்தாக நிலைத்திராது மாறிமாறி வருதல்பற்றிப் 'பொய்' எனப்பட்டது. 'அற்ற மனம்' என்பது உலகவாழ்வுத் தொடர்பு சிறிது மில்லாது விட்டுப்போன உள்ளம். பிறப்பிலி=பிறப்பில்லாதவர்; இனம் பற்றி இறப்புமில்லாதவர் என்பதும் கொள்ளப்பட்டது; பிறப்பும் இறப்பும் இல்லாது என்றும் உள்ளவர். 'மறவாத' என்பது எப்பொழுதும் நினைந்து கொண்டிருப்பது. அதாவது நிலையான அருட் பேரொளியோடு எப்பொழுதும் சிவமாய் விளங்குகிற உள்ளம் என்பது கருத்து. அத்தகைய உள்ள முடையவர் சிவன் திருவடியை மறவாது பேரின்பம் நுகர்வர். "சிந்தையினுள்ளே தெளிய வல்லார்க்கு, சிந்தையினுள்ளே சிவனிருந்தானே" என்று **திருமூலர் திருமந்திரம் 2853**-ஆம் பாட்டிலும், "பொறிப் புலன்களைப் போக்கறுத்துள்ளத்தை--நெறிப்படுத்து நினைந்தவர் சிந்தையுள்—அறிப்புறும் அமுதாயவன்" என்று **திருநாவுக்கரசு அடிகள்** திருவேகம்பத் திருக்குறுந் தொகை 4-ஆவது பாட்டிலும் கூறியருளினமை காண்க.

பஞ்சிற் சீறடியாளைப் பாகம்வைத் துகந்தானை—மேலே கூறியபடி வஞ்சமற்ற மனத்தாரை மறவாதிருத்தலுக்குக் காரணமாகச் சிவபெருமானுடைய அருட்டன்மை கூறப்பட்டது.

எங்கள் பிரான்.—பிரான்—பெருமான் என்ற சொல்லின் திரிபு போலும்—முழுமுதற்றலைவன். மேலே கூறப்பட்ட அருட்டன்மைக்குக்காரணமாகச் சிவபெருமான் எல்லா உயிர்களுக்கும் முழுமுதற்றலைவன் என்பது கூறப்பட்டது. சிவபெருமான் உயிர்களுக்கு முதல்வன் ஆதலின் தன்னைச் சார்ந்து அன்பு செய்து மறவாதிருக்கிற அடியார்களுக்குப் பேரின்ப மளித்தல் கடனுகின்றது. "தன்கடனடியேனையுந் தாங்குதல்—என்கடன் பணி செய்துகிடப்பதே" என்று **திருநாவுக்கரசு அடிகளுடைய** திருக்குறுந்தொகைத் தேவாரமும், "சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடனுதல்" என்று **சிவஞானபோதம்** 10-ஆவது சூத்திர வெண்பாவும் கூறுதல் காண்க.

நினையாதார் நினைவு என்—நினைவு என்பது மக்கள் தங்களுடைய உள்ளத்தில் தங்களுக்கும் சிவபெருமானுக்கு முளதாகிய அத்துவிதத் தொடர்பையும், அதுபற்றி அவன் தங்களுக்கு இடைவிடாது சலியாமற் செய்துவரும் அருட் செயல்களையும் நினைத்தல்; நினைத்தலே மக்களுடைய சிறந்த செயல். நினைவு நல்வழியிற் சென்றாலன்றி அவர்கள் யாதொருநலமும் உலகில் அடைய முடியாது. அவர்கள் சிவபெருமானை நினைந்தாலல்லாமல் உலக நெறியில் அற நெறியிலொழுகி உலகச் சிற்றின்பம் அடைதலும், அருள்நெறியி லொழுகிப் பேரின்பம் அடைதலும் கூடாது. ஆதலின், 'நினையாதார் நினைவு என்' என்றார். 'எவன்' என்ற வினைப் பெயர் 'என்' எனக்குறுகி இன்மைப் பொருள் குறித்து நின்றது. 'ஏ' அசை.

திருஞானசம்பந்த அடிகள் தேவாரம்

சீகாழி

அடலேறமருங்கொடி யண்ணல்
மடலார் குழலாளொடு மன்னுங்
கடலார் புடைசூழ் தருகாழி
தொடர்வா ரவர்தூ நெறியாரே.

பதவுரை :—

ஆர்கடல் புடைசூழ் தருகாழி—நீர் நிறைந்த கடலாற் பக்கத்திற் சூழப்பட்ட சீகாழிப் பதியில்,

மடலார் குழலாளொடு மன்னும்—பூக்களை அணிந்திருக்கிற கூந்தலையுடைய உமாதேவியாரோடு நிலையாகத் திருக்கோயில் கொண்டிருக்கும்,

அடல் ஏறு அமருங்கொடி அண்ணல்—எருது விளங்குகிற துணிக் கொடியை யுடைய எல்லாம் வல்ல தலைவனாகிய சிவபெருமானை,

தொடர்வார் அவர் தூநெறியாரே—சார்ந்து தொழுகின்ற மக்கள் தூய வழியிற் செல்கின்றவர் ஆவர்.

விளக்கவுரை :—

இப்பாடலின் பதவுரையிற் கண்டிருக்கிறபடி உரைநடை செய்து பொருள் கொள்க.

கடலார்புடைசூழ்தருகாழி—'கடலார்' என்பதை 'ஆர்கடல்' என மாற்றிப் பொருள் கொள்க. சூழ்தரு=சூழ்ந்த; தரு—துணைவினை.

மடலார் குழலாளொடு மன்னும்—மடல்=பூவிதழ். அஃது இங்கே ஆகுபெயராய்ப் பூ என்ற பொருள்பட நின்றது. மன்னும்=நிலையாக வீற்றிருக்கும். 'மடலார் குழலாளொடு மன்னும்' என்றதனால் சிவபெருமான் சீகாழிப்பதியில் வீற்றிருப்பது அங்கே தன்னை வந்து வணங்கும் மக்களுக்கு அருள்செய்யும் பொருட்டு என்பது குறிப்பிடப் பட்டது.

அடல் ஏறு அமரும் கொடி அண்ணல்—அடல் என்ற அடைமொழியை அண்ணல் என்ற சொல்லோடு சேர்த்துப் பொருள் கொள்க. அடல் அண்ணல்—எல்லா வல்லமையு முடைய தலைவன். உலகிலுள்ள எல்லா உயிர்களையுங் காத்து இன்பம் அளிக்க வல்லவன் என்பது கூறப்பட்டது. எருது, உயிர்களைக் குறிக்கிறது; எருத்துக் கொடியானது சிவபெருமான் உயிர்களை யெல்லாம் காக்கும் தொழிலை உடையவன் என்று எவரும் அறியக் குறிக்கிறது; ஒரு நாட்டினை ஆளும் மன்னனுடைய கொடியானது அவன் குடிகளை ஆண்டு காத்தலைக் குறித்தல் போல. அமர்தல்=பொலிதல்; விளங்குதல். அண்ணல்='அண்' என்ற அடிச் சொல்லிலிருந்து பிறந்தசொல். இந்தச் சொல்லின் பொருள் ஆராய்ச்சி அறிதற்குச் **செந்தமிழ்ச் செல்வி** 9-ஆவது சிலம்பு 9-ஆவது பரல் 390 முதல் 395 வரையுள்ள பக்கங்கள் பார்க்க.

தொடர்வாரவர் தூநெறியார்—தொடர்தல் என்பது தொடர்பை அறிந்து சார்ந்து தொழுதல் என்னும் பொருள்பட நின்றது. ஓர் ஊருக்குப் போகும் வழியிற் செல்லுகிறவர் முடிவில் அவ்வூரை உறுதியாயடைதல் போல, உள்ளம், வாய், உடல்களால் சிவபெருமானை உண்மையாய்த் தொழுகிறவர்கள் முடிவில் அவன் அடிகளைச் சேர்ந்து பேரின்பம் அடைதல் உறுதியாதலின் அவர்களை அடிகள் 'தூநெறியார்' என்று கூறினார். கட்டு நிலையில் உலகச் சிற்றின்பத்தை அடையச் செய்யும் அறநெறியும், வீட்டு நிலையில் பேரின்பத்தை அடையச் செய்யும் அருள் நெறியும் தூநெறிகளாகும். இவ் விருநெறிகளினின்றும் விலகிய நெறி துன்பத்தை அடைவிக்கும் ஆதலின் தூயதல்லாத தீ நெறியாகும். தொடர்வார் அவர் என்பதில் அவர் பகுதிப்பொருள் விகுதி. தூநெறியாரே என்பதில் ஏ அசை; தேற்றப் பொருள் கொள்ளினும் பொருந்தும்.

—மா. வே. நெல்லையப்ப பிள்ளை.



சிவஞானபோதக் கருத்து

[திரு. மா. வே நெல்லையப்ப பிள்ளை, பி. ஏ.]

பதிப்புரிமை ஆக்கியோற்குரியது

(முன் ௧௩௯-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டாவது அதிகரணம்

எனது உடல் என்றலின் ஆன்மா உளது.

8. தேகான்மவாதி கண்ணாற் காணப்படுகிற உடலே உயிர் அன்றி அதனின் வேறாய்க் காணப்படாத உயிர் என்ற பொருள் வேறே இல்லை என்று கூறுகிறான். அவன் இக் கூற்றின் உண்மையைத் தெரிவிப்பதாக உலகில் "யான் பருத்தேன்," "யான் சிறுத்தேன்," "யான் குறியன்," "யான் நெடியன்," "யான் மனிதன்," முதலியனவாக மக்கள் கூறும் உலகவழக்கை ஏதுவாக எடுத்துக் கூறுகின்றான்.

9. உடலின் வேறாய உயிர் உளது என்பதற்குச் சிறந்த ஏதுக்கள் உளவாயினும் ஆசிரியர் அவை தேகான்மவாதி அறிவுநிலைக்கு எட்டாதனவென அவற்றைக் கூறாது அவன் தனது அறிவுநிலையில் மயக்கம் நீங்கி அறிதற்பாலதாயுள்ள அறிவுநிலையை அடையுமன்னம் ஆசிரியர் அடியிற் கண்டவாறு அவன் ஏதுவாகக் கூறிய உலகவழக்கு முறையைக் கொண்டே அவனை மறுக்கின்றார்.

10. "யான் பருத்தேன்," "யான் சிறுத்தேன்" முதலியனவாகக் கூறும் உலகவழக்கு, மக்கள் உயிருக்குள்ள குணங்களை உடலுக்கேற்றி உபசாரத்தாற் கூறு முறைமையில் உளதாயினும் அது மக்களுக்குள் சிறுபான்மையே வழங்கப் படுகின்றது. எனது உடல், எனது தலை, எனது கை, எனது கால், எனது உறுப்பு, எனது அறிவு முதலியனவாகப் பெரும்பான்மையும் மக்கள் கூறுகின்றார்களே யன்றி நான் உடல், நான் தலை, நான் கை, நான் கால், நான் உறுப்பு, நான் அறிவு முதலியனவாகக் கூறுவதில்லை. இவ்வாறு உலகவழக்கு முறை

யில் மக்கள் பெரும்பான்மையும் கூறுதலினால் உடலின் வேறாய அவ்வுடலைக் கருவியாய் வழங்குதற்கு அதனை உடையதாயிருக்கிற உயிர் உண்டு என்பது பெறப்படுகின்றது. இதனால் "நீ கூறிய உலகவழக்கு முறை உனக்கு ஏதுவாக அமையாது நான் உடலின்வேறாய உயிர் உண்டு என்று கூறும் உண்மைக்கு ஏதுவாய் அமைந்து அதனை அரண் செய்கிறது என்பது அறிவாயாக".

11. ஆசிரியர் கூறிய மொழியைக் கேட்ட பின்னர் தேகான்மவாதி கூறும் தடைமொழியாவது:—பதி, மனை முதலியனவாயுள்ள பொருள்களை என் பதி என் மனை முதலியனவாய் மக்கள் கூறுதல் போலவே தலை, கை, கால், கண், செவி முதலிய உடலுறுப்புக்களையும் என் தலை, என் கை, என் கால், என் கண், என் செவி முதலியனவாக உலகவழக்கில் கூறுகின்றார்கள். இராகுவை இராகுவினது தலையென்று ஒற்றுமைபற்றியே மக்கள் கூறுகின்றார்கள். ஆதலின் என்னது உடல் என்று ஒற்றுமைபற்றிக் கூறும் உலகவழக்கினால் உடலே உயிர் என்பது பெறப்படுகிறது.

12. ஆசிரியர் கூறும் விடைமொழியாவது:—என் பதி, என் மனை முதலியனவாகக் கூறும் உலகவழக்கில் பதி, மனை முதலியன உடலினின்று வேறுபட்ட பிறிதின்கிழமைப் பொருள்கள். அப்பொருள்கள் பலருக்கும் உரியனவாகலாம்; ஒருகாலத்தில் ஒருவருக்கு உரிமையான பதி, மனை முதலியன பிறிதொருகாலத்தில் பிறரொருவருக்கும் உரியனவாகலாம்; அல்லதூஉம் ஒரே பொருள் ஒரே காலத்தில் பலருக்கும் உரியதாயிருக்கலாம். ஆனால் தலை, கை, கால், கண், செவி முதலிய உடலுறுப்புக்கள் உடலினின்று வேறாய்ப் பிரிக்கப்படாதனவாயும் உடலோடு ஒற்றுமையுடையனவாயுமுள்ள தற்கிழமைப் பொருள்கள். அப் பொருள்கள் அவ்வுறுப்புக்களிருக்கிற உடலினை உடையவனுக்கன்றி வேறொருவருக்கும் உரிமையுடையனவாகா. ஆதலின் பதி, மனை முதலிய பிறிதின் கிழமைப் பொருள்களுக்கும் தலை, கை, கால், கண், செவி முதலிய தற்கிழமைப் பொருள்களுக்கும் பெரிதும் வேறுபாடு உளது. நீ உலகாயத நூல் கேட்கு முன்னர் பதி, மனை முதலிய பிறிதின் கிழமைப் பொருள்களையே உயிரென நினைத்து அவற்றைத் தனித்தனி "எனது பொருள்" என்று தற்கிழமைப் பொருள்படக் கூறி மயங்கினாய்; அதுபோல உலகாயதநூல்கேட்டபின் நீ உனதல்லவாகிய பதி, மனை முதலிய பிறிதின் கிழமைப் பொருள்களை உனது உடலினின்று வேறாகப் பிரித்து அறிந்தாலும் நீ அல்லாத உனது தலை, கை, கால், கண், உடல் முதலிய தற்கிழமைப் பொருள்களை உன்னினின்று வேறாய்ப் பிரித்தறியாமல் அவற்றை உன்னோடு ஒற்றுமைப்பட்ட பொருள்களாக மயங்கி அறிகின்றாய். நீ உடலைப் பொருளாகக் கொண்டால் தலை, கை, கால் முதலியன தற்கிழமைப் பொருள்களாகும். உயிரைப் பொருளாகக் கொண்டால் தலை, கை, கால் முதலியனவும் உனக்கு வேறாயுள்ள பிறிதின் கிழமைப் பொருளாகும். பிறிதின் கிழமைப் பொருள் தற்கிழமைப் பொருள் என்ற சொற்றொடர்களால் மயங்காது நீ உற்று நோக்கி ஆராய்வாயாயின் அத் தலை, கை, கால்கள் முதலியன உனக்கு வேறாய்த் தோன்றும். உடலின் வேறாய உயிரிருக்கிறதா இல்லையா என்று பார்ப்பதற்கு, உடல் பிணமான பொழுது எல்லா உறுப்புக்களும் உயிரிருந்த காலத்திலிருந்தனபோ லிருந்தும் அது அசையாமற் கிடப்பதை உற்று நோக்கி அறிவாயாக.

மூன்றாவது அதிகரணம்

ஐம்புலன் அறிதலின் ஆன்மா உளது.

13. உடலானது உயிரன்று என்ற உண்மை பொருந்தும். உலகிலுள்ள நுகர்வுப்பொருள்களாகிய நாற்றம், சுவை, உருவம், ஊறு, ஓசைகளை முறையே உடலின்கண்ணுள்ள மூக்கு, வாய், கண், மெய், செவி ஆகிய அறிவுப் பொறிகள் அறிகின்றன என்று நாம் கண்கூடாய் நேரில் அறிகின்றோம். ஆதலின் அந்த ஐம்பொறிகளுமே அறியும் பொருளாகிய உயிர் என்று இந்திரியான்மவாதி கூறுகின்றான். ஆசிரியர் இந்திரியான்மவாதி கூறிய மொழியைக் கேட்டு அவன் அறிவுப் பொறிகளாகிய கருவிகளை உயிரென மயங்கும் மயக்கத்தை நீக்கும் பொருட்டு அவன் கூறியமுறைமையில் வைத்தே அவனை மறுத்துரைக்கின்றார்.

14. ஆசிரியர் கூறும் விடைமொழியாவது:—நீ கூறுகிறபடியே உடலின்கண் ஐம்பொறிகளிருக்கின்றன. மூக்குப் பொறியானது நாற்றத்தை அறியுமேயன்றி வாய்ப்பொறி அறிகிற சுவையை அறியமாட்டாது. வாய்ப்பொறி சுவையை அறியுமேயன்றி மூக்குப்பொறியறிகிற நாற்றத்தை அறியமாட்டாது. இவ்விரண்டு பொறிகளும் பிறபொறிகள் அறிகிற உருவம், ஊறு, ஓசைகளை அறியமாட்டா. இவ்வாறே பிறபொறிகளிலும் ஒன்று அறிந்ததைப் பிறிதொன்று அறியமாட்டாது. ஆதலின் ஐம்பொறிகளையும் அறியும் கருவிப் பொருள்களாகக்கொண்டு அவற்றிற்கு வேறாய் அறியும் பொருளாய உயிர் என்ற பொருளொன்றுண்டு என்பது அறிவாயாக.

15. ஆசிரியர் கூறியதைக் கேட்ட இந்திரியான்ம வாதி கூறும் கடைமொழியாவது :—ஐந்து பொறிகளில் ஒருபொறி அறிந்ததைப் பிறிதொருபொறி அறியாது என்று நீர் கூறியதை நான் ஒப்புக்கொள்கிறேன். உடலிலுள்ள ஐம்பொறிகளையும் ஐந்து உயிர்கள் என்று கருதி அவை நாற்றம், சுவை, உருவம், ஊறு, ஓசைகளை அறிகின்றன என்று ஏன் கூறுதல் கூடாது? ஓருயிரே ஐம்பொறிகளையும் கருவிகளாகக் கொண்டு நாற்ற முதலியவற்றை அறியும் என்பதற்கு என்ன பிரமாணம் இருக்கிறது?

16. இந்திரியான்ம வாதி கூறிய கடைமொழியைக் கேட்டு அவன் கருவிப்பொருளையே உயிர் என்று கொள்ளும் மயக்க அறிவானுண்டாகிற ஐயத்தை நீக்கும் பொருட்டு ஆசிரியர் பின் வருகிறபடி சூத்திரத்திலுள்ள எடுத்துக்காட்டுச் செய்யுட் பொருள்களைக்கூறி அவனை மறுக்கின்றார்:—

17. மூக்கு முதலிய ஐம்பொறிகளும் உயிரினலேவப்பட்டு முறையே நாற்றம் தலை முதலிய உலக நுகர்வுப் பொருள்களை அறியுமேயன்றித் தனித்தனி அவ்வப்பொருளை அறிந்ததாக உணர மாட்டாது. அவ்வாறு பொறிகளுக்கு உலகப் பொருள்களை அறிதல் மாத்திரமன்றி அவற்றை உணர்கின்ற தாக உணரும் உணர்வும் இல்லையாயின் நினைப்பு (Memory) என்பது ஒன்றில்லையாற்போம். நினைப்பு இல்லையாயின் உலகில் இப்பொழுது நாம் காண்கிறபடியுள்ள அறிவு வளர்ச்சியே மக்களுக்கு இல்லையாற்போம் ஆதலால் நீ கூறுவது அடாது. ஐம்பொறிகளுக்கும் வேறாய் அவற்றைக் கருவிப் பொருள்களாகக் கொண்டு உலக நுகர்வுப் பொருள்களைக் கண்டு கேட்டுண்டுயிர்த்துற்று அறிந்தும் அவ்வாறு அறிந்ததை நான் அறிகிறேன் என்ற உணர்வும் (Self-consciousness) உடைய உயிர் என்ற பொருள் ஐம்பொறிகளுக்கும் வேறாய் உண்டு என்பது அறிவாயாக.

நான்காவது அதிகரணம்

ஒடுக்கம் அறிதலின் ஆன்மா உளது.

18. ஐம்பொறிகளும் உயிர் அல்லவாயினும் அவ்வைம் பொறிகளுக்கு வேறாய்ப் புறத்து நிகழாது அகத்தே நின்று ஐம்பொறிகளையும் செலுத்தி உலக நுகர்வுப் பொருள்களைப் புரியட்ட தேகம் என்று கூறப்பட்ட சூக்குமதேகம் அறியும் ஆதலின் அந்தச் சூக்குமதேகமே உயிர் என்று சூக்கும தேகான்மவாதி கூறுகின்றான்.

19. சூக்குமதேகான்மவாதி கூறியதைக் கேட்ட ஆசிரியர் அவனும் முன்னைய கொள்கையர்களைப் போல உயிர் அறிதற்கு ஏதுவாயுள்ள கருவிப்பொருள்களில் ஒன்றாகிய சூக்கும தேக (நுண்ணுடலை) உயிர் என மயங்கி அறிகின்றான் என்பதை அறிந்து அம்மயக்கத்தைத் தீர்க்கும்படி அவன் கூறிய ஏதுவைக் கொண்டே அடியிற் கண்டவாறு மறுத்துக் கூறுகின்றார்:—

20. சூக்கும தேகமே உயிராயிருந்தால் அவ்வுயிர் அச் சூக்கும தேகத்தில் நிகழ்ந்த கனவுச் செய்திகளைக் கனவு நீங்கிய நனவின்கண் மயங்காது சூக்கும தேகத்தில் நிகழ்ந்தவாறே அறிதல் வேண்டும். அவ்வாறு உலக அநுபவத்தில் நாம் காணவில்லை. சூக்குமதேகத்தில் நிகழ்ந்த கனவுச்செய்திகள் அவ்வாறே நனவின்கண் அறியப்படாமல் மயங்கியும் பிறழ்ந்தும் அறியப்படுகின்றன; அவை முற்றும் அறியப்படாமலும் போகின்றன. ஆதலால் சூக்கும தேகத்துக்கு வேறாய் அச்சூக்கும தேகத்தையும் அதற்குப் புறம்பாயுள்ள தூல தேகத்தையும் கருவிகளாகக் கொண்டு அறியும் உயிர் ஒன்று உளது என்று நாம் கோடல்வேண்டும். உயிர் என்ற தனிப் பொருள் இரண்டு தேகங்களையும் வேறுவேறு காலத்தில் கருவிகளாகக்கொண்டு அறிதலினாலேதான் ஒரு காலத்தில் கனவின்கண் அறிந்த செய்திகளைப் பிறிதொரு காலத்தில் நனவின்கட் பிறழ்ந்தும் அறிந்தும் அறியாமலும், அவ்வாறே நனவின்கட் கண்ட செய்திகள் கனவின்கண் அறியப்படாமலுமிருக்கின்றன. இதனை நீ உற்றுநோக்கிச் சூக்கும தேகத்துக்கு வேறாய உயிர் உண்டு என்ற உண்மையை அறிவாயாக. (தொடரும்)

மும்மையாலுலகாண்ட மூர்த்தி

[வித்வான் திரு. T. P. மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் M. A., B. L.]

(௧௩௮-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழின்பம் :—இத்தென்றற் காற்று ஊற்றின்பத்தையேயன்றி இயற்கையன்னை யூட்டும் ஐம்புலவின்பத்தையும் காட்டும் அடையாளமாக இங்கு விளங்குகிறது. இவ்வாறு ஐயுணர்வெய்தி மனமொருமுகப்பட்டு அலைவற்று நின்றபோது மெய்யுணர் வூட்டும் தமிழ்க்காற்று வீசுகின்றது. அத்தென்றலே போல அம்மலயமலையிலே அகத்தியரிடத்தே வளர்ந்த தமிழும்

செவ்விமணஞ்செய்யீரந் தருகின்றது. ஈரமாவது அன்பு. செவ்விமணமாவது இயற்கைப் புணர்ச்சியாகிய திருமணம். அதனை விளைவிக்கும் அன்பே செவ்வி மணஞ்செய் ஈரம் என்க. நக்கீரனார் களவியற்கு உரை காணும்போது, தூய்மையான அன்பின் வடிவத்தைக் காதலன் காதலி மேலாக்கி, அதனைச் செல்வத்தை நாடியும், அழகை விரும்பியும், இன்பத்தைக் குறித்தும், அறிவை வியந்தும் இன்னும் பலவற்றைக் கருதியும் எழும் அவாவினின்றும் வேறுபிரித்து, "அவனே தானே ஆகிய அந்நெறி ஏகனாகி இறைபணி நிற்பதுபோல" இந் நாட்டங்கள் எல்லாம் இன்றி "அவளே தானே தமியர் காணக் காமப்புணர்ச்சி இருவயினொத்தல்" ஆகி நானென்ற முனைப்புங் கெட்டு, அவ்விருவரும், பால்வழியோடிக் கடவுளியக்க இயங்கி, ஓராவிற் கிருகோடு ஒருங்கே தோன்றினாற் போல அவ்விருவர் மனத்தும் ஒருங்கே அன்புதளிர்க்க இவ்வியல்பே அன்பினைந்திணைக் களவெனப்படும் எனவிரித்து விளக்குகின்றனர் அல்லரோ? அதுபற்றியன்றே இல்லது இனியது நல்லதெனப் புலவரால் நாட்டப்பட்டதென நக்கீரர் கூறும் இவ்வியற்கைப் புணர்ச்சி தெய்வப் புணர்ச்சி அல்லது கடவுட்புணர்ச்சி என்றும் பெயர் பெறுகிறது! கண்டது கொண்டுகாணுதலை விளக்குமுறையைப் பின்பற்றிக் காதலன் காதலிமேல் வைத்துக் கூறினார்களேனும், ஆங்கு ஆராயப்படுவது உண்மையன்பின் வடிவே யன்றோ? அம்முறையே காதலன் காதலிமேல் வைத்துச் செவ்விமணஞ்செய் ஈரம்—என்றாரேனும், ஈங்கும் உண்மையின் பின் வடிவமே கூட்டப்படுகின்றதென்று கொள்க. இதனுண்மைவடிவை அறியாது சில போலிச் சமணர் இதனைப் பழிப்பதற்கு இத்தமிழ் நாட்டில் இடமுண்டோ? இவ்வன்பன்றோ கடவுள் வடிவம்! அருகனார் விளக்கிய அருள் இதன் வடிவமேயன்றோ? தமிழ் என்றால் இனிமை என்று பொருள் காண்கின்றனர் பெரியோர். தமிழே ஈரமாம். தெய்வத்தமிழென்றாராதலின் அவ்வீரமும் தெய்வமாயிற்று. ஞாலமளந்த மேன்மையுடையதாதலின் எங்கும் மணமுடையதாய்ச் செவ்விமணஞ் செய்யீரமாயிற்று. இயற்கைப் புணர்ச்சியை மணம் என்பதும் ஞாலத்தாரனைவரும் அதனை நன்றென உட்கொள்வதாலன்றோ? எனவே செவ்விமணஞ்செய்யீரம் தமிழின் தனிச்சிறப்பியல்பாய் அதன் வடிவமேயாகிறது என்க. அன்பினை விளக்குவதாலன்றோ இத்தமிழ், நம்நாட்டளவில் நில்லாது உலகையே யளந்து காண்கிற மேன்மை பெறுகிறது! அன்பும் சிவமும் ஒன்றுதல் அறிந்த பின் அன்பே சிவமாய் அமர்ந்திருப்பராதலின் அன்பு வடிவாம் தமிழ், கடவுள் வடிவாம் தமிழுமாகிறது.

தென்றலாம் தமிழ்:—ஒப்புமைக் கூட்ட வணியினும் ஒப்புமையுள்ளே ஒளிர்தலின் தென்றற்குக் கூறிய அடைகளைத் தமிழுக்கும் தமிழ்க்குக் கூறியவற்றைத் தென்றற்கும் கூட்டிப் பொருள் கொள்ளுதலும் தகும். தமிழ்கூறும் இயற்கைப் புணர்ச்சி வளர்வதும், குன்றிடையே வண்டுகள் ஒலிக்கும் சந்தனப் பொழிலிடையே யன்றோ? இயற்கைப்புணர்ச்சி குறிஞ்சி யொழுக்கமென அகப்பொருணூல்கள் கூறுதல் காண்க. "ஞாலமளந்த" என்று தமிழுக்கு அடைகொடுத்தார், தென்றலைக் கால் எனக்கூறலின். தென்றலும் கால்கொண்டு உலகையளத்தல் காண்க. தெய்வத்தமிழ் என்கிறார். ஆளுடைய அரசு, தென்றலைத் திருவடி நிழலுக்கு ஒப்புமை கூறின் அதனையும் தெய்வத் தென்றலெனக் கூறத் தட்டில்லை யன்றோ? தமிழும் தென்றலும், அகத்தியப் பள்ளியினின்றும் வருகின்றமையால், மேலான கருத்துக்களைக் குறிக்கோளாய்க் கொண்டவை. உடற்கின்பமூட்டுவதோடு நில்லாது, உள்ளத்திற்கு மின்பமூட்டி நமது மனத்தை ஒருமுகப்படுத்துகின்றது தென்றல். தமிழும் உள்ளத்திற்கு இன்பமூட்டுவதோடு நில்லாது உயிர்க்கு மின்பமூட்டி உயிர்க்குயிரான ஆண்டவனை இன்ப அன்புவடிவாகக் காட்டி நிற்கின்றது. "ஞாலமளத்தல்" என்றமையால், இவ்விரண்டும் காக்குந் தலைவனாம் திருமாலோடு ஒத்தலின், முதனோக்கிற் சிறியவாய்த் தோன்றினும் பின்னரும் நோக்க நோக்க அடிமுடி காணப்பெறாவுருவாய் ஓங்கிவளர்ந்து பிறவற்றைக் கீழழுத்தி இன்பத்தையூட்டி உலகத்தைக் காத்தலும் கொள்க. தமிழ்நாட்டிற்கே சிறந்த தென்றலையும் தமிழையும் முத்திற்குப் பின்வே இத்துணையாழக் காதல் கூறுவதனைக்கண்டு அவ்வின்பத்திற்குரிய வேண்டாவோ? இப்பாட்டின் நுட்பத்தை உய்த்துணர்ந்து கொள்க. இத்தகைய நாட்டிலே, மனத்தை ஒருமுகப்படுத்தும் தென்றலும் அன்புவடிவாம் ஆண்டவனைக் காட்டும் தமிழ் நூல்களும் உலவுவதைப் பழிப்பார்க்கு நாம் வயிறுபிடிக்கவேண்டாவோ? இத்தென்றலும் இத்தமிழுமன்றோ, இதனால், இறைவனுக்கும் இனியவாயின எனப் பின்வந்தாரும் மனமுருகிப் பாடித் தம்மை மறக்கின்றனர். திருவிளையாடற் புராணம் பாடவந்த பரஞ்சோதியார்,

"கடுக்க வின்பெறு கண்டனுந் தென்றிசை நோக்கி
அடுக்க வந்தவந் தாடுவா ளுடலினி ளைப்பு
விடுக்க வாரமென் காறிரு முகத்திடை வீசி
மடுக்க வுந்தமிழ் திருச்செவி மாந்தவு மன்றோ"

எனப்பாடுவது இவ்வாறு சேக்கிழார் காட்டிய வழியேயன்றோ? "தரவந்த" என்பதன் நுட்பத்தையும் காண்க.

"ஈதா கொடுவெனு மூன்று முறையே
இழிந்தோனுைப் போன் மிக்கானிரப்புரை"

என்றார் பவணந்தியார். தா எனக்கேட்டல் ஒப்போனிரப்புரையாயின் தரல் ஒப்போன் செய்கையேன்றோ? அந்நாட்டிற்கு அம் மலயம், தமிழையும் தென்றலையுந் தந்தது. அந்நாட்டினர்க்கு அவ்விரண்டு தக்கனவாயின்மை இதனால் விளங்கவில்லையா? இதனாலும் அந்நாட்டினரின் பெருமையன்றோ மலயக்குன்றிடை வளரும் விளக்காகப் பிறங்குகிறது?

சேந்தமிழ்த் திருமந்திரம்

[நவாலியூர், சோ. பாலசுப்பிரமணியம் (இளமுருகனார்)]

(ககரு-ம் பக்கத் தொடர்ச்சி)

இனி, இம்மந்திர நூல்கள் தோன்றிய வரலாறு சொல்லுதும் :—

இற்றைக்கு ஓர் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் சோழமரபிலே 'அபயகுல சேகரன்' என்னும் பெயர் பூண்ட அரசனொருவன் தெய்வச் சிவநெறியிலும் செந்தமிழ் மொழியிலும் வரம்பிறந்த பேரன் புடையவனாய் அரசியல் நடாத்திவந்தான். ஒருநாட் சிவனடியார் சிலர் அவ்வரசனது அவைக்களம் புகுந்து, மூவர் தேவாரத் திருமந்திரச் செய்யுட்களில் ஒரோவொன்றைப் பண்ணோடு பிழைபட ஓதினர். ஓதக்கேட்ட அம் மன்னர்பிரான் நெஞ்சம் நெக்குருகி அத்தேவாரத் திருமந்திரங்களைத் தேடியெடுக்க யாண்டும் தலைப்பட்டும் அகப்படாமை கண்டு துன்பமுழந்திருந்தான். இருந்தவன், பொல்லாப் பிள்ளையார் அருள்பெற்ற நம்பியாண்டார் நம்பி என்பவரின் பெருமையைப் பலரால் நன்கு தெரிந்து, அவருழைச் சென்று தம் பெருங்குறையை முறையிட்டான். அந்நம்பியாண்டார் நம்பி பொல்லாப்பிள்ளையாரின் பேரருளினாலே தேவாரத் திருமந்திர ஏடுகள் வைக்கப்பெற்ற இடத்தைத் தெரிந்து அரசர்க்குணர்த்தினார். உணர்த்தக் கேட்ட வேந்தனும் நம்பியாரும் சிதம்பரத்தை நண்ணி, ஐந்தொழில் நாடகவண்ணனுக்குச் சிறப்பாகத் தளிர்தூவிப்போற்றி வழிபாடு உஞற்றி, நால்வர் திருவுருவங்களையும் அழகுபெறச் செய்து திருவுலாவெடுத்துத் தேவாரத் திருமந்திர ஏடுகள் வைக்கப்பெற்றிருந்த அறைக்கு முன்பு நிறுத்தி அம் மந்திர ஏடுகளைக் கண்டெடுத்தார்கள்.

அவற்றை வான்மீகம் மூடியிருக்கக்கண்டு உள்ளம் உடைந்து பெரிதும் வருந்தினார்கள்.

அவ்வமயத்து, "அன்பர்களே! இக்காலத்து வேண்டுவன தந்து எஞ்சியன மறைந்தொழியச் செய்தேம்" என்றோரோசை எல்லார்க்குங் கேட்கும்படியாக முதல்வனாணையால் விசும்பகத்தெழுந்தது.

அதுகேட்டுக் கவலைதபுத்துத் திருமந்திர ஏடுகளையெடுத்துத் திருமுறைகளாக வகுப்பான் தொடங்கினர்.

திருஞானசம்பந்தப்பெருமான் அருளிச்செய்த தேவாரப் பதிகங்களை முதன் மூன்று திருமுறைகளாகவும், திருநாவுக்கரசு அடிகள் அருளிச்செய்த திருப்பதிகங்களை நாலாவது ஐந்தாவது ஆறாவது திருமுறைகளாகவும், சுந்தரமூர்த்தியடிகள் அருளிச்செய்த தேவாரப்பதிகங்களை ஏழாவது திருமுறையாகவும், வகுத்து முடித்தனர். முடித்தபின்னர் மணிவாசகப் பெருமான் அருளிச்செய்த திருவாசகம் திருச்சிற்றம்பலக்கோவையார் என்னும் இருநூல்களையும் எட்டாவது திருமுறையாகவும், திருமாளிகைத் தேவர், சேந்தனார், கருவூர்த்தேவர் என்றித் தொடக்கத்தார் ஒன்பதின்மர் பாடிய திருவிசைப்பாவும் அவ்வொன்பதின்மருள் ஒருவராகிய சேந்தனார் பாடிய திருப்பல்லாண்டும் ஆகிய இரண்டையும் ஒருங்குகூட்டி ஒன்பதாவது திருமுறையாகவும் வகுத்தனர்.

பின்னர், திருமூலர் செய்தருளிய திருமந்திரம் என்னும் தமிழாகமத்தைப் பத்தாவது திருமுறையாகவும், திருவாலவாயுடையார், நம்பியாண்டார்நம்பி, காரைக்காலம்மையார், நக்கீரனார் என்றிவருள்ளிட்டார் பன்னிருவர்பாடிய நாற்பது மந்திரத்தொகை நூல்களையும் பதினொராந் திருமுறையாகவும் வகுத்தாரென்பது.

இவ்வாற்றான் செந்தமிழ்மொழிக் கண்ணுள்ள மந்திர நூல்களை யெல்லாம் ஓர் அடைவுபடுத்துப் பதினொரு திருமுறைகளாக வகுத்தருளிய பின்னர், பொல்லாப் பிள்ளையாரறிவுறுத்தியபடி, நம்பியாண்டார் சுந்தரமூர்த்தியடிகள் அருளிச் செய்த திருத்தொண்டத் தொகையை முதனூலாகக் கொண்டு அறுபத்துமூன்று தனியடியாரும் ஒன்பது தொகையடியாரும் ஆகிய உண்மைச் சிவதொண்டரின் உண்மைநிலையையும், அவர் தாம் சைவ ஒழுக்க நெறிநின்று ஆண்டவன் திருவுள்ளக்குறிப்பையும் மக்கட் பிறவியின் விழுமிய நோக்கத்தையும் முட்டின்றி யினிது முடித்த தனிப்பெரும் திறனையும்

" திருத்தொண்டர் திருவந்தாதி " என்னும் நூலால் விரித்துரைத்தருளினார் என்பது.

இது நிகழ்ந்து ஒரு நூறுயாண்டு கழிந்தபின்றை, குலசேகரவேந்தன் வழித்தோன்றலாய்ப் பிறந்த அநபாய சோழன் காலத்திலே சேக்கிழார் அடிகள் பிறந்து, அவ்வேந்தன் வேண்டுகோளின்படி நம்பியாண்டார் நம்பி முன்பு பாடிய திருவந்தாதியை விரித்துத் திருத்தொண்டர் புராணம் என்று சொல்லப்படும் பெரிய புராணத்தை யிறைவன் திருவருட்டுணையாற்பாடி முடித்தார். அத்திருத் தொண்டர் புராணத்தை முன்னர்த் தொகுத்த பதினொரு திருமுறைகளோடு பன்னிரண்டாவது திருமுறையாக அடைவுபடுத்தினர். படுத்திய பின்னர் அவை தம்மைச் செப்பேட்டிலே செவ்வனே பொறித்துக் கூத்தப்பிரானின் தூயதிருமுன்பு வைத்தாரென்பது.

என்றிதுகாறும் விரித்துரைத்தவாற்றான் செந்தமிழ்த் திருமந்திர நூல்கள் ஆகிய பன்னிரு திருமுறைகளின் பிறப்பும், அவை தம்மைப் பின்னர் அடைவுபடுத்தி வரையறுத்துத் தொகுத்த வரலாறும், கூறப்பட்டன.

இனி, இப்பன்னிரு திருமுறைகளையும் மந்திர நூல்கள் என்று குறியீடு செய்தல் அமையுமோவெனின், அமையும்; அது காட்டுதும்.—

" கண்ட பெருமந்திரமே மூவர்பாடல் "

என்றும்,

" மந்திரங்க ளெழுகோடி யாதலினான் மன்னுமவர்
இந்தவகை திருமுறைகள் ஏழாக வெடுத்தமைத்துப்
பந்தமுறு மந்திரங்கள் பதினொன்று மாதலினால்
அந்தமுறை நான்கினொடு முறைபதினொன் றாக்கினார் "

என்று திருமுறைகண்டபுராணமுடையார் கூறுதலானும், " ஒண் செந்தமிழ் மந்திர ஏடு " என்று பெரும்பற்றப் புலியூர் நம்பி, திருவிளையாடற் புராணத்துட் கூறுதலானும், அவை தம்மை மந்திர நூல்கள் என்று குறியீடு செய்தல் பெரிதும் இயை புடைத்தாம் என்க.

பண்டொருநாள் நுதல்விழி நாட்டத் திறையோனைத் தூதுவிடுத்தும், முதலைவாய்ப்பட் டிறந்த மதலையஞ் செல்வனை நல்லுயிர் பெற்றெழச் செய்தும், எற்புக்கூட்டங்களை ஓர் ஏலவார் குழலியாக்கியும், மறைக் கதவினைத் திறந்தும், மூங்கைப் பிள்ளையை மணிவாய் மலரச்செய்தும் வந்தது நம்செந்தமிழ்த்

திருமந்திரங்கள் என்று உணர்ந்துகொள்க. இவற்றானும் இத் திருமுறைகள் மந்திர நூல்களாம் என்றறிக.

" பந்தமுறு மந்திரங்கள் பதினொன்று " என்று திருமுறைகண்ட புராணமுடையார் பதினொரு திருமுறைகளையுமே மந்திர நூல்களென் றுரைத்தலினால், பன்னிரண்டாவது திருமுறையும் மந்திர நூ லாகாதோவெனின்; அஃதாமாறு காட்டுதும் :—

தவத்தினாலே மனத்தூய்மை பெற்று மெய்யுணர்ந்து அவாவறுத்து வீடு பேறு கலைக்கூடியதனால் தூய பேரறிவு விளக்கம் வாய்க்கப் பெற்ற சேக்கிழார் அடிகளால் அத் திருத்தொண்டர் புராணம் செய்தருளப் பட்டமையானும், மற்றந் நூலுக்கு 'உலகெலாம் உணர்ந்தோதற் கரியவன்' என்று முழுமுதற் றலைவனால் அடியெடுத்துக் கொடுக்கப்பட்டமையானும், சைவ ஒழுக்க நெறிநின்று மக்கட் பிறவியின் விழுமிய நோக்கத்தை இனிது நிறைவுசெய்த திருஞான சம்பந்தப் பெருமான், திருநாவுக்கரசு அடிகள், முதலாம் தவப்பெரியார் அருள்கொண்டு கிளந்தவிடத்தும் அன்றி வெகுண்டு கிளந்தவிடத்தும் அவர் தம் ஆணை தப்பாது அவ்வப்பயனையுய்த்த மந்திரச் செய்யுட்களின் பெருமையை விரித்துரைத்தலானும், 'பாவை பாகர் சிறந்த திருமுறை' என்று இந்நூலை உமாபதிசிவனார் எடுத்தோதுதலானும், அநபாய சோழன் தொன்றுதொட்டு இன்றுகாறும் சிவநெறித் தொண்டரால் ஓப்பப்பட்டும் ஓதப்பட்டும் வருதலானும், அவ்வாற்றான் ஓதி வந்தார் ஆக்கமும் சிறப்பும் பிணிநீக்கமும் பெற்று நல்வாழ்வுற்று நின்றமை தெரியக் கிடத்தலானும், இக்காலத் தோதுவார் மேலே சொல்லிய பெரும்பயன்களைத் தப்பாது பெறக் காண்டலானும், இத்திருத்தொண்டர் புராணம் என்று சொல்லப்படும் பன்னிரண்டாவது திருமுறையும் மந்திர நூலாமென்றுணர்க. எனவே, பன்னிரு திருமுறைகளும் முதல்வன் பேரருட் பெருக்கத்தால் செந்தமிழ் மொழிக்கண்ணே தோன்றிய விலைமதிப் பறியாப் பெருமந்திர நூல்களாம் என்று கடைப்பிடிக்க.

இம்மந்திர நூல்கள் ஒருசிறிது ஆற்றலும் கடவுட் பெற்றியும் உடைய உயிர்த் தொகுதிகளையும், அவை தாமும்வாய்க்கப் பெறாத உயிர்த் தொகுதிகளையும், கடவுளர் என்று கொள்ளாது அவற்றை யெல்லாம் உயிர்களே யென்றொதுக்கி யாண்டும் ஒழிவற நிறைந்து நின்று எல்லாப் பொருள்களையும் இயக்கி, உலகத்தை நடைபெறச் செய்யும் சிவபிரானையே

முழுமுதற் கடவுளாகக் கொள்கின்றன. கடவுள், உலகம், உயிர் என்னும் முப்பொருளின் உண்மைகளையும் கடவுள் உலகெலாமாகி வேறாய் உடனாய் நிற்கும் நிலையையும், உயிர்கள் தம்மை நெருங்கப் பிணித்த இருண்மலப் புணர்ப்பினின்றும் நீங்கித் தூய்மைபெறும் பொருள்களையும் மிகவும் திட்ப நுட்பமாக அறிவுறுத்துவனவாம். அவற்றை ஈண்டு உரைப்பின் வரம்பு கடந்து பெருகும்.

இனி இம் மந்திர நூல்களை யாம் ஓதவேண்டிய முறை பிறழாது உண்மை நம்பிக்கையும் பேரன்பும் வைத்து ஒழுங்கு தப்பாது ஓதிவருவோமாயின், உடம்போடு மருவி வாழுங் காலத்து யாம் வேண்டும் பொருட் செல்வம், கல்விச்செல்வம், மக்கட்பேறு, பிணி நீக்கம், பகைத்தபுதி முதலா மார்க்கமும், ஊழ்வினையான்வரும் பேரிடர் இறப்பு முதலியவற்றின் நீக்கமும், பிறவும் மாணப்பெற்று இறுதியில் வீட்டின்ப நுகர்ச்சியும் பெறுதல் ஒருதலை.

இம்மந்திர நூல்கள் எழுந்த ஞான்று செய்த தெய்வச் செயல்களும், பெருமையும், அவை தம்மை ஓதும் முறையும், பயனும், என்ற இவற்றைக் காலம் வாய்ப்புழி இவ்வெளியீட்டின் வாயிலாக எழுதி உதவுவல்.

கடல்

(மறைமலையடிகள்)

கடல்—கட்பார்வையினைக் கடந்து நிற்பது.

ஆர்கலி
நரலை
குரவை
அழுவம் } —பேரிரைச்சல் இடுவது.

பரவை—பரந்திருப்பது.

அளக்கர்
பவ்வம்
உவரி } —உப்புநீரை யுடையது.

கார்கோள்—மழை முகிலையுண்டாக்குவது.

முந்நீர்—ஆற்றுநீர், ஊற்றுநீர், மழைநீர் மூன்றுக்குங் காரணமாவது.

ஆழி—ஆழம் மிக்கது.

(சிறுவர்க்கான செந்தமிழ்)

இலக்கணமும் இலக்கியமும்:
LANGUAGE AND LITERATURE

நெடுங்கணக்கு (அரிவரி)

[பண்டித திரு. ஞா. தேவநேயப் பாவாணர்]

(க௬௪-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இனி, உயிரொலியும் மெய்யொலியும் உயிரும் மெய்யும் (Life and body) கூடிய உயிர்மெய் (பிராணி) போல ஒன்றி ஒலிப்பது உயிர்மெய்வரிகளாற் குறிக்கப்பட்டது. உயிர், மெய், உயிர்மெய் முதலியகுறியீடுள் தமிழரின் தத்துவவறிவை யுணர்த்தும். உயிர்மெய் வரிகளால் ஒலிநூலறிவும் வரிச்சுருக்கமும் பயனும்.

தமிழ் அரிவரியில் உயிர் முன்னும், மெய் பின்னும் ஆய்தம் இடையும், உயிருள் குறில் முன்னும் நெடில் பின்னும், மெய்யுள் வலி முன்னும் மெலி பின்னும் இடை இடையும் வைக்கப்பட்டன.

உயிர்மெய் வரியும் எழுத்து முறையும் தமிழுக்கே சிறப்பாகும். இந்திய மொழிகட்கெல்லாம் இவை பிற்காலத்தே தமிழைப் பின்பற்றி யேற்பட்டன. அரபி, ஹீப்ரு முதலிய சேமியர் (Semitic) கலை மொழிகள் எல்லாவற்றிற்கும், சம்ஸ்கிருத மொழிந்த ஆரியக் கலைமொழிகள் எல்லாவற்றிற்கும் இவையில்லை. எழுத்துக்கள் இங்கிலீஷிற் போல உயிரும் மெய்யும் வேறு வேறு அடுத்தடுத் தெழுதப்படுவதுடன், அரிவரியில் உயிரும் மெய்யும் முறையின்றி மயங்கிக்கிடக்கும். ஆரியமும் சேமியமுமாகிய மேலை மொழிகட்கெல்லாம் உயிர்மெய் வடிவும், எழுத்து முறையும் இல்லாதிருக்கவும், சம்ஸ்கிருதத்திற்கு மட்டும் அவை எங்ஙன மிருந்திருத்தல் கூடும்? சம்ஸ்கிருதத்திற்கு அவை இருந்தனவெனின், அதன் இனமாகிய ஜெர்மன், டச்சு, கிரேக்கு, லத்தீன் முதலிய மொழிகட்கும், அவற்றை அடுத்து வழங்கும் சேமிய மொழிகட்கும் ஏன் அவையில்லை? வடமொழி ஆரியர் இந்தியாவிற்கு வந்தது கி. மு. 3000. அவர் வருகைக்கு முன்னரே தமிழில் எழுத்திருந்தது. அவ்வெழுத்துக்கள் உயிர்மெய் நீங்கலாக 31.

ஒலி முறையினும் சொன் முறையினும் தமிழுக்கு அடுத்துள்ள கிரேக்க, லத்தீன் மொழிகளில் முறையே எழுத்துக்கள்

24, 25; வடமொழியில் 48. லத்தீன் எழுத்துக்கள் 24, என்றும், 23 என்றும் கணக்கிடுவதுமுண்டு. தமிழிலில்லாத சில செயற்கை யொலிகள் லத்தீன், கிரேக்கு மொழிகளிலுள. ஆனால் அவற்றிற் பலவற்றிற்குத் தனி வரிகள் இல்லை. B, G, முதலிய தொனிப் பொலிகட்குத் தனி வரியுள. bh, gh முதலிய மூச்சொலி சேர்ந்த தொனிப் பொலிகட்குத் தனிவரியில்லை. சம்ஸ்கிருதத்தில் அவற்றிற்கெல்லாம் தனிவரி யுண்டு. அதோடு ஞ, ண முதலிய தமிழ் எழுத்துக்களும் சேர்க்கப்பட்டுள. மேலை மொழிகட்கும் தமிழுக்குமுள்ள எழுத்துக்களிற் பெரும்பாலன வற்றிற்குத் தனிவரி யமைத்து வடமொழி யெழுத்துக்களைப் பெருக்கிக் காட்டினர் வடமொழிவாணர். க, ச, ட, த, ப என்று தமிழ் முறையில் வல்லின மெய்யெழுத்துக்களிருப்பதும், k, kh, g, gh என ஒவ்வொரு வல்லின மெய்யும் தொனிப்பதும், தொனியாததும், மூச்சொலி சேர்ந்ததும் சேராததுமாக நந்நான்காக உறழப்பட்டிருப்பதும், சம்ஸ்கிருதத்தின் செயற்கையான எழுத்துப் பெருக்கைக் காட்டும்.

சம்ஸ்கிருதம், கிரேக்க லத்தின் மொழிகளின் திரிபு அல்லது வளர்ச்சி யென்பதற்குப் பல ஆதாரங்களுள. கிரேக்க லத்தீன் மொழிகள் ஆரியமொழிகளில் மிகப்பழைமையானவை. கிரேக்க லத்தீன் எழுத்துக்களினும் சம்ஸ்கிருத எழுத்துக்கள் மிகுதி. கிரேக்க லத்தீனிலுள்ள பல சொற்கள் சம்ஸ்கிருதத்தில் மிகத் திரிந்துள்ளன. சம்ஸ்கிருதம் என்னும் பெயருக்கே நன்றாகச் செய்யப்பட்டது என்பது பொருள். உலகத்திலுள்ள மொழிகள் எல்லாவற்றினும் எழுத்துப் பெருக்கமும் செயற்கை யொலிப் பெருக்கமுமுள்ளது சம்ஸ்கிருதமொன்றே. அதனாலேயே அது வழக்கற்றொழிந்தது.

வடமொழி யெழுத்துக்களை 48 ஆகப் பெருக்கி யிருப்பினும், ஒலி முறைப்படி பார்ப்பின், அவற்றிற் புணரொலிகள் அல்லது கூட்டெழுத்துக்கள் பலவாகும்.

ऋ, ऌ என்பவை குற்றியலுகரம் சேர்ந்த ரகர லகரங்களாகும். ॠ என்பது ऋ என்பதன் நீட்டம். अं என்பது அம் என்னும் அசை; அகர உயிரும் மகர மெய்யும் சேர்ந்தது. இவை உயிர்மெய்களும் அசையுமாக விருந்தும் உயிரெழுத்துக்களிற் சேர்க்கப்பட் டிருக்கின்றன. எ, ஒ என்ற உயிர்கள் வடமொழிக்கில்லாதது ஒரு பெருங் குறைவாகும்.

மெய் யெழுத்துக்களில் ஐ வருக்கத்தில் h சேர்ந்த எழுத்துக்களெல்லாம் இரட்டை யெழுத்துக்களாகும். சந்தி யக்ஷ

ரங்கள் சில தனி யெழுத்துக்கள் போற் காட்டப்படும். இதனால் வடமொழி யெழுத்துப் பெருக்கினால் ஒரு சிறப்புமில்லை யென்க.

வடமொழி ஆரியர் இந்தியாவிற்கு வந்த பின்னரே உயிர்மெய் வரியும் எழுத்து முறையும் வடமொழிக்கு ஏற்பட்டன. வடமொழி வரிகள் தென்மொழி வரிகளின் திரிபே என்பது இருமொழி வரிகளையும் ஒப்பு நோக்குவார்க்கு இனிது புலனாம். வடமொழி யரிவரி யேற்பட்ட பின் அதை யொட்டி அதன் கிளைமொழிகட்கும் பின்பு தமிழ்க் கிளைமொழிகட்கும் அரிவரிகள் ஏற்பட்டன. இதனால் பெர்சியன் அரபி வரிகளைக் கொண்ட இந்துஸ்தானி யொழிந்த ஏனை யிந்திய மொழிகட்கெல்லாம் உயிர்மெய் வரியும் எழுத்து முறையும் ஏற்பட்டுள.

ஆதியில் ஏனைய மொழிகட்கெல்லா மில்லாது உயிர்மெய் வரிகள் தமிழுக் கிருந்ததினாலேயே, அதன் அரிவரி நீண்டு நெடுங்கணக் கெனப்பட்டது. ஏற்கெனவே நெடுங்கணக்கா யிருக்கும் அரிவரியை (செந்தமிழ்ப் புரவலர் உமாமகேசுவரம் பிள்ளையவர்கள் கூறியபடி) இன்னும் நெடுங்கணக்காக்க நினைப்பது என்னே பேதைமை!

இனி ஒரு மொழிக்கு நிரம்பின அரிவரி யிருப்பினும், பிறமொழிச் சொற்களை அதில் மொழி பெயர்க்கப் போதிய சொற்களுளவா என்று பார்த்தல் வேண்டும். இலவெனின் பிறமொழிச் சொற்களையும் பிறமொழி யெழுத்துக்களையும் அதிற் புதிதாய்ச் சேர்க்க இடமுண்டு. தமிழில் எல்லாப் பொருள்களையும் வெளியிடத் தக்க எண்ணிறந்த சொற்களுள்ளன. ஆதலின் பிறமொழிச் சொற்களையேனும் எழுத்துக்களையேனும் புதிதாய்ச் சேர்க்க எட்டுணையும் இடமின்று. பொருள்களின் சிறப்புப் பெயர் (Proper Name) களே எழுத்துப் பெயர்ப்பிற்கும் (Translation) தற்பவத்திற்கும் இடமாகும். இதற்குப் பிறமொழி யெழுத்துக்கள் வேண்டுவவல்ல. தமிழில் இயன்ற துணை எழுதல் தகும். ஏதேனுங் குறையிருப்பின் அது எல்லா மொழிகட்கும் பொதுவாகும். இதற்கென்றே தமிழிற் புத்தெழுத்துக்களைச் சேர்ப்பின் தமிழின் தூய்மையும் இயல்பும் எளிமையும் இனிமையும் கெடும். அங்ஙனம் தமிழைக் கெடுத்து வழங்குவதினும், அதை விட்டுவிட்டு அயன் மொழியை வழங்குவதே சாலச் சிறந்ததாம். அதனாற் புத்தெழுத்துக்களைத் தமிழிற் புகுத்தவேண்டும் என்னும் பொருந்தாக் கூற்றைப் புறத்தே விடுக்க.

குறுந்தொகை

மூலமும் விளக்க உரையும்

[இலந்தையடிகள் வித்துவான் இரா. சிவ. சாம்பசிவன்]

(பதிப்புரிமை ஆசிரியர்க்கே)

(கசுஎ-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாலை

தலைமகன் தலைமகளை உடன்கொண்டு செல்லும்பொழுது இடைச்சுரத்து அவர்களைக் கண்டார் சொல்லியது.

பெரும் பதுமனார் பாடியது

[*இவரை மீளிப்பெரும்பதுமனார் என்று கூறுப.*]

7. வில்லோன் காலன கழலே தொடியோள்
மெல்லடி மேவுன சிலம்பே நல்லோர்
யார்கொ லளியர் தாமே யாரியர்
கயிறாடு பறையிற் கால்பொரக் கலங்கி
வாகை வெண்ணெற் றொலிக்கும்
வேய்பயி லழுவ முன்னி யோரே.

என்பது செலவின்கண் இடைச்சுரத்துக் கண்டோர் கூறியது.

பதவுரை :—வில்லோன் காலன கழலே—வில்லையுடையவனுடைய காலினிடத்துள்ளன வீரக்கழல்கள் ; தொடியோள் மெல்லடி மேவுன சிலம்பே—வளையல்களை அணிந்தவளின் மெல்லிய பாதங்களின் மேலிடத்திருப்பன சிலம்புகள் ; நல்லோர் யார்கொல்—அழகிய இவ்விருவரும் யாவரோ ? ஆரியர்—கூத்தாடிகள் கயிறுஆடு—(கயிற்றில் ஆடுகின்ற காலத்தில்) கயிற்றில் ஆடிக்கொண்டிருக்கின்ற ; பறையின்—அடிக்கப்படுகின்ற பறையைப்போல ; கால்பொர—காற்று வீசுதலால் ; கலங்கி—நிலை கலங்கி அலைவுற்று ; வாகை வெள்நெற்று ஒலிக்கும்—வாகையினது வெள்ளிய நெற்றுக்கள் ஒலிக்கின்ற ; வேய் பயில் அழுவம்—மூங்கில் நெருங்கி வளர்ந்த காட்டில் ; முன்னியோர்—போகக் கருதி முன்தோன்றிச் செல்பவர் ; அளியர்—அன்னார் இரங்கத்தக்கார். தாம், ஏ - அசைகள்.

அளியர் தாம் ஆரியர் எனக்கொண்டு, "இவர்களின் இருமுது குரவர் இரங்கத் தக்கார்" என்றும் கூறுப.

காலன, மேவுன—குறிப்பு முற்றுக்கள். வில்லோன் தொடியோள்—குறிப்பு வினையாலணையும் பெயர்கள். யார் கொல்—கொல்—ஐயப்பொருளில் வந்ததோர் இடைச்சொல். கயிறுஆடு—ஏழாம் வேற்றுமைத் தொகை. ஆடுபறை—வினைத்தொகை. கால்—காற்று. வாகை—மாவிசேடம். வெண்ணெற்று—வெள்ளை நிறமுடைய முதிர்ந்து உலர்ந்த காய். வேய்—மூங்கில். அழுவம்—பரப்பு, இங்குப் பாலைவனம். பழுவம் எனில் நடுக்கம் தரும் வழி என்க.

முன்னியோர்—போகக் கருதி வந்தோர் ; முன்னிடத்தி லுள்ளவர்களுமாம். ஆரியர் என்பதற்கு மேலோர், இருமுது குரவர் (தாய் தந்தை) எனப் பொருள் கொண்டு, 'அளியர் தாமே ஆரியர்' என்பதற்குத் தலைவன் தலைவிகளின் பெற்றோர்கள் அவர்கள் பிரிவால் கவலுவர் ஆதலின், அவர்கள் துயர்நிலைகுறித்து இரங்கத்தக்கார் என்று கூறுவாரும் உண்டு.

'வில்லோன் காலன கழலே, தொடியோள் மெல்லடி மேவுன சிலம்பே' என்று கூறியது ;—யாதொரு பாரமுமின்றியும் செல்லற்கரிய இக்கொடும் பாலைவனத்தில், வில்லையும் கழலையும் சுமந்த தலைவனும், தொடியும் சிலம்பும் சுமந்த தலைவியும் வருந்திக் கடந்து செல்லல் நோக்கிக் கண்டோர் இரங்கிக் கூறியவாறாம்.

'தொடியோள் மெல்லடி மேவுன சிலம்பு'—பெண்களின் கால்களில் அணியப்படும் சிலம்பு வதுவைக் காலத்துக் கழற்றப்படுதல் மரபு. தலைவி சிலம்பணிந்தவாறு தலைவனோடு செல்கின்றாள் என்பதால் தலைவன் தலைவியைக் களவிற்கொண்டு செல்கின்றான் என்று கண்டார் அயிர்த்தற்குக் காரணமாயிற்றென்க.

"போக்கெல்லாம் பாலை," என்பதும், "கொண்டு தலைக் கழியினும்" என்பதும் இங்கு அறியத்தக்கன.

மேற்கோள் விளக்கம்

1. "வில்லோன் ....அளியர் தாமே"—எனும் செய்யுளுள் பெயர் வினைகளின் ஈற்றின் நின்ற ன, ள, ர, யக்களின் அயலிலுள்ள ஆகாரம் ஓகாரமாகவும் பெறும் என்பதற்கு மேற்கோள்.

—(நன்னூல்—மயிலை, 226 பக்.)
—(நன்னூல்—சங்கரநம, 187 பக்.)

2. "வில்லோன்…………முன்னியோரே"—"இஃது இடைச் சுரத்துக் குறும்பினுள்ளோர் இவரைக் கண்டு கோள் இழைப்புற்றார்க்கு அவர் பெண்டிர் கூறியது; இவை செலவின்கட் கூறியன."

—(தொல்—அகத்—நச், 100)

3. "சேய் நிலைக்கு அகன்றோர் செலவினும் வரவினும்" என்பதற்கு—"வில்லோன்………முன்னியோரே." மேற்கோள்.

—(தொல்—அகத்—இளம்பூ—37 பக், சூ. 43)

4. "வில்லோன்………அளியர் தாமே"—எனும் செய்யுளுள் ஆகாரம் ஓகாரமாய்த் திரியும் பெயருமுள என்பதற்கு மேற்கோள்.

—(தொல்—சொல்—இளம்பூ, சூ. 192)

—(தொல்—சொல்—தெய்வச்சிலை, சூ. 188)

—(தொல்—சொல், சூ. 195)

5. "வில்லோன்………சிலம்பே" —செவிலிக்குக் கண்டோர் கூறியது. —(தொல்—செய்யுளியல், 498)

6. "வில்லோன் காலன கழலே"—எனும் பாட்டில், வில்லோனும் தொடியோளும் பொருளெனப்படும். "வேய்பயில் அழுவம் முன்னியோரே" என்பது அப்பொருள் நிகழ்ச்சியான் இறந்த காலம் எனப்படும். அப்பாட்டிற்குச் சிறந்தார் அவராகலின் அவரே பொருளாயினர் என்பது." (—தொல்—செய்யுளியல், பக். 506)

7. "வில்லோன்………முன்னியோரே"—சுரத்திடைச் செல்லும் தலைமகனையும் தலைமகளையும் கண்டு எதிர் வருகின்றார் யார்கொல் இவ்வாறு போந்தார் எனச் சொல்லியதற்கு மேற்கோள்"

(—இறையனாகப் பொருள்—பக். 166)

8. "வில்லோன்……—சிலம்பே"

"வில்லோன் விறலடி மேலன பொற்கழல் வெண்முத்தன்ன, பல்லாளிணை யடிமேலன பாடகம்".

—(இறையனாகப் பொருள்—மேற்கோள்—பக். 166)

9. "வாகை வெண்ணெற்றொலிக்கும்"

"வாகைவிரிந்து வெண்ணெற்றொலிப்ப."

—(காரைக்காற்பேய்—மூத்த திருப்பதிகம், 3—1)

10. "நெற்றுவிளை யுழிஞ்சில் வற்றலார்க்கும்"—(குறுந்.—39.)

11. இச்செய்யுளைக் "கண்டார் அயிர்த்தல்" என்னும் துறைக்கு உதாரணமாகக் காட்டுவர்.—(நம்பி யகப்பொருள்—சங்கப் பதிப்பு)

12. "வில்லோன் காலன……சிலம்பே"—என்பது நற்றிணை உரையிற் காணும் மேற்கோள்.

13. "மாதர்க்குக் காலணியாகிய சிலம்பு, வதுவைக் காலத்தில் கழற்றுதல் மரபு; அங்ஙனமாக இவள் சிலம்பணிந்தபடி ஓராடவனுடன் செல்லக் காண்டலால் களவினிற் கொண்டு தலைக்கழியப் பெறுவளா மென் றெனையோர் அயிர்த்துக் கூறியதாயிற்று"

—(நற்றிணை 2 உரை)

"வேம்பயில் அழுவம்"

14. "வெவ்வளி வழங்கும் வேய்பயில் அழுவம்"

—(நற்றிணை 46)

15. "வேய்பயில் அழுவ முவக்கும்"

—(தொல்—அகத், 44 சூ. இளம்பூ—உரை மேற்கோள்)

16. "வில்லோன் காலன கழலே தொடியோள்
மெல்லடி மேவுன சிலம்பே நல்லோர்"

என்றமையால் இருவரும் பெருஞ்செல்வத்தினர் என்று குறிப்பித்தவாறு.

"வில்லோன் காலன கழலே" என்றமையால் தலைவன் வலிமையையும் விளக்கியவா றாயிற்று.

'அழுவம்'—"மாதவத் தாட்டியும் மயங்கதர் அழுவத்து"

—(சிலப்பதிகாரம்—காடுகாண் காதை, 206)

மெய்ப்பாடு:—பிறன்கண் தோன்றிய வருத்தம் பற்றிய இளிவரல் என்னை? "மூப்பே, பிணியே, வருத்த மென்மையோ டியாப்புற வந்த இளிவரல் நான்கே"—(தொல்—மெய்ப்பாட்டியல் 6). என்பாராகலின்.

பயன்—செலவு விலக்குதல்.

தனித்தமிழ் மாட்சி

"உலகில் உள்ள எல்லாப் பொருள்களும் எல்லா உயிர்களும் மாறுதல் அடைதலாகிய பொது நிகழ்ச்சியைப் பார்த்து, அப் பொது வகையான மாறுதலுள் எத்தகைய மாறுதல் மக்களால் வேண்டப் படுவது என்பதனை உணர்ந்து பாராமல், தம் நிலைகுலைந்து மாறுதலாகிய வேண்டாத தொன்றைக் கடைப்பிடியாய்ப் பிடித்துக் கொண்டு, அதன்படி நமது அருமைச் செந்தமிழ் மொழியுந் தனது தூய நிலை குலைந்து மாறுதல் அடையவேண்டு மென்று உரைப்பது அறிவுடையோரால் ஏற்றுக் கோடற் பாலதாமோ?"

—மறைமலை யடிகள்.

அறிவியற் பகுதி - Science

உளநூல் (Psychology)

[திரு. மா. பாலசுப்பிரமணியம், எம். ஏ.]

(௧௭௧-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தன்மையியல் (Personality)

சுற்றமும் தன்மையாக்கமும் :—ஒருவனது தன்மை நல்லாக்கம் பெறுவது அவனுடன் இயைபு கொண்ட சுற்றத்தின் இயல்பானும் என்பது உளநூற் புலவர்தங் கொள்கை. இதனை ஈண்டு சிறிது விரிப்பாம். பச்சிளங் குழவியாக இருக்குஞான்று குழவியின் தன்மை பெரும்பாலும் பெற்றோர்களால் நிச்சயிக்கப்படுகின்றது என்பது கண்கூடு. குழவியின் விழைவுகளை யெல்லாம் குழவியே தெரிந்து நிறைவேற்றிக் கொள்ளுதல் இயலாத தொன்றாம். ஆகலான் குழவியின் பெற்றோர்களே குழவிக்கு விழைவு நிறைவேற்றம் செய்தல் வேண்டும். எனவே குழவியின் தன்மை பிறரைச் சார்ந்து நிற்ப தோன்றுகின்றது. (The Personality of the Child is one of Dependence) நான்கு அல்லது ஐந்து ஆண்டுகள் நிறையப் பெற்று, ஓர் உடன் பிறப்பைக் கொண்ட குழந்தையின் தன்மையாக்கம் சிறிது முதிர்ச்சி யடைகின்றது. இம்முதிர்ச்சி நன்முறையிலேனும் தீயமுறையிலேனும் நிகழ்வதொன்றாம். பெற்றோர்கள் தம் இளம் உடன்பிறப்பை மிகுதியாக உன்னிப்பதைக் கண்டு சில குழந்தைகள் பொறாமை கொள்வர்; சில குழந்தைகள் தாமும் இனித் தம் நலம் கருதாது, தம் பெற்றோர்களைப் போன்று, தம் இளம் உடன் பிறப்பை நன்கு உன்னிக்கவேண்டும் எனக் கருதுவர். உடன்பிறப்பின் சார்பால் சில குழந்தைகளின் தன்மையில் பொறாமை எனுங் குற்றம் புகுவதும், சில குழந்தைகளின் தன்மையில் தந்நலங் கருதாப் பிறர்நலங் கருதும் நற்பான்மை புகுவதும் அக்குழந்தைகளின் எதிர்காலத் தன்மை யாக்கத்தை நிச்சயிக்கின்றன.

முதற்கண் தன் தன்மை ஆக்கம் அடைதற்குத் தன் பெற்றோரைச் சார்ந்துநின்ற பச்சிளங்குழவி நான்கு அல்லது ஐந்து ஆண்டுள்ள குழந்தை யாம்பொழுது தன் தன்மையைத் தானே நிச்சயித்துக்கொள்ளச் சிறிது சிறிதாகத் தொடங்குகின்றது. அக்கால் தான் பிறர்மாட்டுச் செய்யத் தக்கனவற்றையும் தன் மாட்டுப் பிறர் செய்யத் தக்கனவற்றையும் அறியும் அறிவு தலைப்பட்டு அவ்வறிவு வழியான் ஒழுகலாற்றான் தன்மை நிலைபேறு எய்துகின்றது. நிற்க.

பள்ளிச் சிறுவனாக வாதல் பள்ளிச் சிறுமியாகவாதல் விளங்கும் காலம் வந்துறுதலும், சிறுவர் சிறுமிகளின் கடப்பாடுகள் மிகுதிப் படுகின்றன. அன்றியும் பெற்றோர், ஆசிரியர் முதலிய பிறர் அச் சிறுவர் சிறுமியர் மாட்டுச் செய்தக்க கடப்பாடுகளும் மிகுதிப் படுகின்றன. இவ்விரு கடப்பாடுகளையும் அவ்வவர் ஆற்றுமாற்றால் அவ்வவர்க்குரிய தன்மையாக்கம் எதிர் எதிர் நிலைபேறு எய்துகின்றது.

பள்ளி வாழ்க்கைக்குப் பிறகு தொழில் வாழ்க்கை எழுகின்றது. ஈண்டுத், தனிமகன் குழுவிற்குச் செய்தக்க கடப்பாடுகளும், குழு தனிமகற்குச் செய்தக்க கடப்பாடுகளும் மேலும் பெருக்கம் அடைகின்றன. இப் பெருகிய கடப்பாடுகளை ஆற்றுமாற்றால் தனிமகனும் குழுவும் தன்மை ஆக்கம் பெறுகின்றன. ஆயின் குழுவிற்கும் ஒரு தன்மையுளதோ எனும் ஐயம் ஈண்டு எழும். குழுவிற்கும் தன்மையுண்டு இறைப்பொருட்கும் தன்மை யுண்டு என்பதே உளநூற் புலவர்தங் கொள்கையாம். (Note such sayings as "The whole army acted as One Person"). குழுவிற்கும் தன்மையுண்டு எனுங் கொள்கையைக் குழுவுள்ள நூல் (Social Psychology), இனவுள்ள நூல் (Racial Psychology) என்னும் நூல்களில் கண்டு தெளிக. நிற்க.

தொழில் வாழ்க்கையொடு இயைந்து மணவாழ்க்கை எழுங்கால் இல்லானும் இல்லாளும் ஐம்புலத்தார்க் காற்ற வேண்டிய கடப்பாடுகளும், அவ்வைம்புலத்தார் இல்லறத்தார்க்கு எதிராற்றவேண்டிய கடப்பாடுகளும் பெருகுகின்றன. இக் கடப்பாடுகளை அவ்வவர் ஆற்றுமாற்றால் அவ்வவர்க்கும் எதிரவர்க்கும் தன்மை யாக்கம் நிலைபேறு எய்துகின்றது.

இதுகாறும் கூறியவற்றால் ஒருவனது தன்மை ஆக்கமடையுமாறு நன்கு புலனாகின்றது. தனிமகனாய ஒருவன் தன்மாட்டுப் பிறர் இன்னின்ன கடப்பாடுகள் ஆற்றற்குரியர் என எதிர்பார்த்தலும், தான் பிறர்மாட்டு இன்னின்ன கடப்பாடுகள் ஆற்றற்குரியன் என அறிதலும், ஆய இவ்விருவகை முறையில் ஒழுகலாற்றான் ஒருவனது தன்மை தேற்றம் எய்துகின்றது என்பது துணிபு. தனிமகற்கும் குழுவிற்கு மிடையுள்ள உளச்சார்பான இயைபு அமைவு உடைத்தாயின் அன்றி, தனிமகனின் தன்மை ஆக்கம் அடையாது எனும் உண்மை

ஈண்டு அறிதற்பாலது. (The Personality of an individual depends upon the adjustment (அமைவு) which he maintains with reference to the demands of Society on him.)

தன்மையின் அமைவின்மைகளும் அவையிற்றை அமைவு படுத்துமாறும்

(Maladjustments in Personality and their Treatment)

குழுவின் உளப்பான்மையுடன் தம் உளப்பான்மையை இயைபு படுத்த இயலாதார் அமைவிலா தன்மையினராவர். தன்மையின் அமைவின்மை (Maladjustments in Personality) பலவகைப்படும். அவையிற்றுள் (1) உண்ணிலைத் தன்மை, (2) தகவின்மைத் தன்மை, (3) சிற்றீட்டுத் தன்மை என்பன மூன்று. இவை ஆங்கிலத்தில் முறையே (1) Shut-in-Personality, (2) Invalidism, (3) Poor Compensation (1. ஷட் இன் பேர்ஸனலிடி, 2. இன்வேலிடிஸம். 3. பூர் காம்பேன்ஸேஷன்) எனப்படுகின்றன. தனிமகனுைய தன்னிடத்திருந்து குழு எதிர்பார்க்கும் தன் கடப்பாடுகளை ஆற்ற இயலாதவனாய், அக்காரணம் பற்றி குழுவுடன் கலந்து வாழ மாட்டாதவனாய் நிற்பானொருவன் உண்ணிலைத் தன்மையனாவன். மிகுந்த செல்வம் படைத்தவன் ஒருவன் தன்னைச் சூழ்ந்து வாழும் பிறர் வறுமையாற் பீடிக்கப் படுவதை நன்குணர்கின்றான். ஆயினும் ஒரு வாசியில்லாக் காசும் அவர்தம் அவ்வறுமையைப் போக்குமாறு பயன்படுத்த ஒருப்படுகின்றானல்லன். தனது இச்செய்கையால் பிறர் தன்னை விரும்பார் என்பதை அறிந்து அச்செல்வன் அப்பிறருடன் கலந்து (தற்காலச் செல்வர் பலர் வாழ்வதுபோல) வாழமாட்டாதவனாய்த் தனித்து வாழ்கின்றான். அவ்வாறு வாழுங்கால் அவனது உளவாழ்க்கையும், பிறரவர் உளங்களுடைய கலவி இன்மையான், தனித்த தொன்றுகின்றது: எனவே அவனது தன்மை ஒரு பயனற்ற உண்ணிலைத் தன்மையாகின்றது. ஓர் ஆராய்ச்சியாளன் பல்லாண்டுகள் பல்வகைக் கலைகளையும் ஆராய்ந்ததன் பயனாகக் கடவுளின்மைக் கொள்கையனாக (Atheist) ஆகின்றான்: இக் கொள்கையை முடிந்ததோர் கொள்கையாகவும் கருதுகின்றான். இன்னவன் தன் கொள்கைகளைப் பிறர்க்குப் பலகால் பன்னிப் பன்னிக் கூறியும் ஒருவரும் அவன் கொள்கையை ஏற்றுக்கொள்ளாமை கண்டு உள்ளம் கவலுகின்றான். அன்றியும் தன் கொள்கையைக் கொள்ளா யாவரையும் அறிவிலிகளாகக் கருதி அவர்களுடன் உளங்கலந்து வாழ இசையானுகின்றான். இவன் மொழி கேட்டாரும் இவனுடன் உளமியைந்து வாழ ஒருப்

படுகின்றாரல்லர். எனவே அவன் தனித்த வாழ்க்கையில் நிற்கின்றான். ஆகலான் அவனது தன்மையும் நல்லாக்கம் பெறுமாறின்றி உண்ணிலைப்ப தொன்றுகின்றது: அவன் ஓர் உண்ணிலைத் தன்மையனாகின்றான்.

தகவின்மைத் தன்மையை இனி அறிதல் வேண்டும். ஒரு போர்வீரன் போர்க்களத்தில் நின்று மாற்றார்களைத் தன் சுடு கருவியால் வீழ்த்தத் தொடங்குகின்றான். அஞ்ஞான்று மாற்றார் அணியினின்றும் பல வெடிகுண்டுகள் ஒன்றன்பின் ஒன்றாய் அவனருகில் வந்து விழுந்து வெடிக்கின்றன. அந்நிகழ்ச்சியால் உண்டாம் மின்னொளிகளும் அதிரொலிகளும் அவனது கட்புலனையும் செவிப்புலனையும் மிக்கு அயர்விக்கின்றன. அவ்வயர்வைப் பொறுக்க மாட்டாதவனாய் அவன் கட்பார்வை யிழந்து விடுகின்றான். அப்போர் வீரன் களத்துக்கு வருமுன்னர்த் தன் உயிரை இழக்கத் துணிந்திருந்தும், களத்தில் தனக்கு நேரக்கூடிய இன்னல்களின் வகைகளையும் அளவினையும் நன்கு அறியாமையினால், தன்னால் எதிர் பார்க்கப் படாத வகையினதும் அளவினதுமாய இன்னல் நேர்ந்த ஞான்று, அந்நிலையுடன் தன் வீரச்சார்பான உளப்பான்மையை இயைபு படுத்தத் தகவிலனாய், உளம் மருளவும் தன் வீரம் குன்றவும் அதனால் தன் தன்மையாக்கம் சிதைவுறவும் பெற்றுத், தன் கட்பார்வையை இழந்து விடுகின்றான். போர் நிலைமை அப்போர் வீரன் மாட்டு உயரிய பான்மையுள்ள வீர உளத்திட்பத்தை எதிர்பார்த்திருக்க, அவன் அத்தகைய உளத்திட்பத்தைத் தோற்றுவிக்கும் தகவின்மையினனாயினமையின் தன் கட்பார்வையை இழக்க நேரிட்டது. சுருங்கக் கூறுமிடத்து அவன் தகவின்மைத் தன்மைக்கு ஆளாய் அதனாலாம் கேட்டினைப் பெற்றான் என்பது விளக்கம்.

சிற்றீட்டுத் தன்மையை இனி அறிதல் வேண்டும். ஒரு வகையால் நேர்ந்த உளப்பான்மைசார் இழப்பினை ஈடுசெய்யுங்கால் சிறுமையுள்ள வகையால் ஈடுசெய்ய முயல்வாரவர் தன்மை சிற்றீட்டுத்தன்மை எனப்படும். இதனை ஓர் எடுத்துக்காட்டால் விளக்குவாம். ஒரு செல்வச்செருக்குள்ள மனைவி, ஏழையாகிய தன் கணவன் என்றும் தனக்கு அடிமைப்பட்டு நிற்கவேண்டும் என்று விழைகின்றாள். கணவனோ அதற்கு ஒருப்படாமல் அவளை முற்றப் புறக்கணித்து நிற்கின்றான். இஃது ஆற்றாத மனைவி, தான் விரும்பிய வகையில் தன்மை அமைவுபெற இயலாமைக்கு மனங் கவன்று, வேறு வகையில் உள நிறைவு பெறக் கருதி களவொழுக்கத்தில் ஈடுபடுகின்றாள். அஃதாவது அவள் சிற்றீட்டுத் தன்மையள் ஆகின்றாள்

என்பது. நல்லிசை அரிதிற்பெற முயலகில்லான் பெருஞ்சுட்டு எளிதிற்பெறவே முயல்வான் எனும் பொருள்படும்.—He who cannot obtain fame can easily earn notoriety—என்னும் ஆங்கிலப் பொது மொழி மேற்கூறப்பட்ட சிற்றீட்டுத் தன்மையை விளக்குவதேயாம்.

ஆங்கிலத்தில் Fame எனப்படுவது தமிழில் நல்லிசை எனப்படும் என்பதும், ஆங்கிலத்தில் Notoriety எனப்படுவது தமிழில் பெருஞ்சுட்டு எனப்படும் என்பதும் பின்வரும் இரு நீதி நெறிவிளக்கச் செய்யுட்களால் அறியக் கிடக்கின்றன.

(1) அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டும்—உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியி னூங்கில்லைச்
சிற்றுயிர்க் குற்ற துணை.

(2) பிறராற் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாமே நோற்பதொன் றுண்டு—பிறர்பிறர்
சீரெல்லாந் தூற்றிச் சிறுமை புறங்காத்தி
யார்யார்க்குந் தாழ்ச்சி சொலல்.

மலாய் நாட்டில், நச்சு நீக்கும் செடி

மலாய் நாட்டிற் கொடு நஞ்சுடைய பாம்பினங்கள் பல வாழ்கின்றன. ஆயினும் அவற்றால் அங்குள்ள மக்கள் கடிபடுதல் மிக அருமை. காரணம், இயற்கையாகவே அவண் தோன்றியுள்ள ஒருவகைச் செடியே. மலாய் நாட்டில் ஒருவன் பாம்பு கடித்திறந்த பின் பிணத்தைச் சுடலை கெடுத்தேகும் வழியில் ஒரு செடியருகிற் சிறிது நேரம் பிணத்தைப் போட்டு வைக்க, உடனே செத்தவன் உயிர் பெற்றெழுந்து நடந்து வீடு சென்றவுடன் மயங்கி உயிர் துறப்ப, மறுபடியும் அவனை அச்செடிக் கடியிலே கிடத்தமீண்டும் உயிர் பெற்றதைக் கண்ட அவன் உறவினர், அவனை அச்செடியைவிட்டு அழைத்துக் கொண்டு செல்ல முன்போலவே உயிர் நீத்தான். இது கண்ட அவர்கள் அச்செடி நச்சு நீக்கும் என எண்ணிச் சிலநாள் அச்செடியடியிலேயே இறந்தவனைக் கிடத்தி நஞ்சு நீக்கி நலப் படுத்தியுள்ளனர். இச்செடியையே பழைய மலேயர்கள் தங்கள் குடிசையின் நாற்புறத்திலும் பயிரிட்டு வைத்திருப்பதோடு வெளியிற் செல்லும்போதும் அதன் வேர்த்துண்டில் ஒன்றினை இடுப்பிற் சேர்த்திருப்பர். ஆகவே, இந்திய அரசினர்க்கு இவ்வேர் ஒன்று மலேயாவிலிருந்து பார்வைக்கு அனுப்பப் பட்டுள்ளது. இச்செடி அழகிய பூக்களுடன் மிளிர்கிறதாம். ஆ! இறைவன் படைப்பு மிக இனிது!



[MR. T. B. KRISHNASWAMY MUDALIAR, M.A., B.L.]

மதுரைக் கண்ணங்கூத்தனார் இயற்றிய

கார் நாற்பது

(க௮௩-ஆம் பக்கத் தொடர்ச்சி)

கார்ச்சே ணிகந்த கரைமருங்கி னீர்ச்சேர்ந்
தெருமை யெழிலே றெறிபவர் சூடிச்
செருமிகு மள்ளரிற் செம்மாக்குஞ் செல்வி
திருநுதற் கியாஞ்செய் குறி. ௩௧

This season when the sturdy buffalo wallows in the rain-fed tanks and wearing the flower wreaths flung by men on the banks goes forth proudly like warriors in the field of battle, is the one I spoke of as the time of my return to my beautiful-browed lady. (31)

(வினைமுற்றிய தலைமகன் பாகற்குச் சொல்லியது)

கடாவுக பாகதேர் காரோடக் கண்டே
கெடாஅப் புகழ்வேட்கைச் செல்வர் மனம்போற்
படாஅ மகிழ்வண்டு பாண்முரலுங் கானம்
பிடாஅப் பெருந்தகை நற்கு. ௩௨

THE MAN SPEAKS TO HIS FRIEND

Like to the mind of the fortunate, who seek undying renown the bees with irrepressible mirth sing sweet songs in the forest. The *Pidav* trees are rich in blossom. Following the fast-running clouds, O Charioteer, drive the car swiftly. (32)

கடனீர் முகந்த கமஞ்சூ லெழிலி
குடமலை யாகத்துக் கொள்ளப் பிறைக்கும்
இடமென வாங்கே குறிசெய்தேம் பேதை
மடமொழி யெவ்வங் கெட. ௩௩

The clouds full of the water lifted from the sea, pour it on the western hills; that season I marked out as the time of return to my young beloved to end her sorrows; therefore drive swift the car, O Charioteer! (33)

(பருவங் கண்டழிந்த தலைமகள் ஆற்றல் வேண்டித்
தோழி தனது ஆற்றுமை தோன்ற வுரைத்தது)

விரிதிரை வெள்ளம் வெறுப்பப் பருகிப்
பெருவிறல் வானம் பெருவரை சேருங்
கருவணி காலங் குறித்தார் திருவணிந்த
ஒண்ணுதல் மாதர் திறத்து. ௩௪

THE MAID SPEAKS

The majestic clouds having drunk to the full of the wide waves of ocean reach the tall mountain. That season the Lord marked out to his belowed, the wearer of the Golden ornament on her bright forehead, as the time of his return. (34)

சென்றநங் காதலர் சேணிகந்தா ரென்றெண்ணி
ஒன்றிய நோயோ டிடும்பை பலகூர
வென்றி முரசி னிரங்கி யெழில்வானம்
நின்று மிரங்கு மிவட்கு. ௩௫

Her husband having gone to a far distant land and her many cares and love-longing being intense, even the cloud that goes sounding victoriously in the sky, stops awhile to pity her. (35)

(வினைமுற்றி மீளுந் தலைமகன் பாகற்குச் சொல்லியது)
சிரல்வாய் வனப்பின வாகி நிரலொப்ப
ஈர்ந்தண் டளவந் தகைந்தன—சீர்த்தக்க
செல்வ மழைமதர்க்கட் சின்மொழிப் பேதையூர்
நல்விருந் தாக நமக்கு. ௩௬

THE MAN TO THE CHARIOTEER

The cool red buds of the *mullai* in beautiful rows have blossomed like the open mouths of the callow young of the *chichili* bird. Most grateful unto us therefore is the famous and flourishing town of the maiden with the rain-cool eyes and sweet speech. (36)

(தோழி பருவங்காட்டித் தலைமகளை வற்புறுத்தது)
கருங்கடல் மேய்ந்த கமஞ்சூ லெழிலி
இருங்க லிறுவரை யேறி யுயிர்க்கும்
பெரும்பதக் காலையும் வாரார்கொல் வேந்தன்
அருந்தொழில் வாய்த்த நமர். ௩௭

THE MAID SPEAKS TO HIS MISTRESS

The clouds very heavy with water gathered from the dark ocean pour their flood on the big rocks of the neighbouring mountain. Even in this season, will he not return, our Lord, who is engaged in the King's wars. (37)

புகர்முகம் பூழிப் புரள வுயர்நிலைய
வெஞ்சின வேழம் பிடியோ டியைந்தாடுந்
தண்பதக் காலையும் வாரா ரெவன்கொலோ
ஒண்டொடி யூடு நிலை. ௩௮

The fierce elephant of the mountain marked with spots on its face, rolls on the ground with its she-elephant raising the dust. Even in such season will he not come our Lord? Cease your love-longing, O Maid, with the radiant bangles! (38)

அலவன்க ணேய்ப்ப வரும்பீன் றவிழ்ந்த
கருங்குர னொச்சிப் பசுந்தழை சூடி
இரும்புன மேர்க்கடி கொண்டார் பெருங்கெளவை
ஆகின்று நம்மூ ரவர்க்கு. ௩௯

Wearing the leaves of the black *Nochi* whose buds look like crab's eyes and then blossom, the plough men have begun newly to plough the wide fields. The delay must, therefore, be a great pain to our Lord. (39)

(பருவம் வந்தமையால் தலைவர் வருதல் ஒருதலையெனக்
கூறித் தோழி தலைமகளை ஆற்றுவித்தது)

வந்தன செய்குறி வாரா ரவரென்று
நொந்த வொருத்திக்கு நோய்தீர் மருந்தாகி
இந்தின் கருவண்ணங் கொண்டன் றெழில்வானம்
நந்துமென் பேதை நுதல். ௪௰

Oh, Soft Maid! All the indications of our Lord's return have come to pass. As comfort to thy distress, the beautiful clouds have taken on the colour of the dark dates. Thy forehead shall brighten up. (40)

பதினாறுபேறு

"பதினாறும்பெற்றுப் பெருவாழ்வடைக"
என்னும் பழமொழியின் வாய்மை

"மறைக ணிந்தனை சைவநிந்தனை பொருத மனமும்
தறுக ணைம்புலன் களுக்கேவல் செய்யுருச் சதுரும்
பிறவி தீதெனப் பேதையர் தம்மொடு பிணக்கும்
உறுதி நல்லறஞ் செய்பவர் தங்களோ டுறவும்

யாது நல்லன்பர் கேட்கினு முதவுறு மியல்பும்
மாத வத்தினே ரொருப்பினும் வணங்கிடு மகிழ்வும்
ஓது நல்லுப தேசமெய் யுறுதியு மன்பர்
தீது செய்யினுஞ் சிவச்செய லெனக்கொளுந் தெளிவும்

மனமும் வாக்குநின் னன்பர்பா லொருப்படு செயலும்
கனவி லும்முன தன்பருக் கடிமையாங் கருத்தும்
நினைவில் வேறொரு கடவுளை வழிபடா நிலையும்
புனித நின்புகழ் நாடொறு முரைத்திடும் பொலிவும்

தீமை யாம்புறச் சமயங்க ளொழித்திடுந் திறனும்
வாய்மை யாகவே பிறர்பொருள் விழைவுறு வளனும்
ஏழு றும்பர தாரநச் சிடாதநன் னோன்பும்
தூய்மை நெஞ்சின்யா னெனதெனுஞ் செருக்குருத் [துறவும்

துறக்கமீ துறையினு நரகிற் றோய்கினும்
இறக்கினும் பிறக்கினு மின்பந் துய்க்கினும்
பிறைக்கொழுந் தணிசடைப் பெரும விவ்வரம்
மறுத்திடா தெனக்குநீ வழங்கல் வேண்டுமால்"

உ
கணபதி துணை.

திருத்தணிகைப் பிள்ளைத்தமிழ்

[பருவத்துக்கு ஒரே பாடல் கொண்டது]

[வ. சு. செங்கல்வராய பிள்ளை, எம். ஏ., இயற்றியது.]

"திருத்தணிகைப் பிள்ளைத் தமிழ்" செப்பச் சேர்ப்பேன்
கருத்தினிலே ரம்பன் கழல்.

1. காப்புப் பருவம்

*பின்னைக் குரியோன்! முதலாய
பெரியோ ருன்முன் னிலைநின்று
முன்னைப் பொருளே! தணிகைமலை
முத்தே! காவாய் காவாயென்
றுன்னைப் போற்றுங் காரணத்தால்
ஒப்பில் மணியே! ஒளிவிளக்கே!
நின்னைக் காப்பா ரெவரேயோ
நீயே நின்னைக் காக்கவே.

2. செங்கீரைப் பருவம்.

கடியுறு மாமல ரிடுபவர் காவல! செங்கோ செங்கீரை
கலையுள யாவுளு முறைதரு காரண! செங்கோ செங்கீரை
செடியுறு தீவினை எரிசெய்வ சீகர! செங்கோ செங்கீரை
திருமகள் நாமகள் புகழ்செய்சு சீகர! செங்கோ செங்கீரை
அடியுறு பாவலர் இடர்களை சேவக! செங்கோ செங்கீரை
அலைவிரி காவிரி வருகரை ஏரக! செங்கோ செங்கீரை
வடியுறு வேலவ சிகையுறு சேவல! செங்கோ செங்கீரை
வரைமகள் பாலக தணிமலை நாயக! செங்கோ செங்கீரை.

3. தாலப் பருவம்

[1]தந்தைக் குரைசொலும் விந்தைக் குருபர! சாமீ! தாலேலோ
சததள மலரினன்[2] வழிபட அருளும்வி சாகா! தாலேலோ
வந்தித் திடுமரி[3] தந்திக்[4] கருள்தரு வாழ்வே! தாலேலோ
மகபதி[5] துதிசெய வரமுத வியதணி வாகா! தாலேலோ

---

* 'பின்னைக் குரியோன் திருமால்'

1. தந்தைக் குபதேசித்தது
2. பிரமன் வழிபட்டது
3. விஷ்ணு பூசித்தது
4. நாகம் பூசித்தது
5. இந்திரன் பூசித்தது

செ: திற் குருமணி நந்திக்[6] கருளிய தேவே! தாலேலோ
திருமலை குருமலை பலமலை மருவிய சேயே! தாலேலோ
சந்தத் தமிழ்சொலு மெந்தைக் கொருகுரு! தாலே தலேலோ
தணிமலை வருமொரு சரவண பவகுக! தாலே தாலேலோ.

4. சப்பாணிப் பருவம்

மோனத் துளதே உண்மை நிலைப்பொருள் என்றறி **வித்த**வனே!
முத்துக் குமரா! பத்தர்க் கெளியாய் கொட்டுக சப்பாணி!
ஞானத் திரளே! வேதப் பொருளே! தாள **விளக்க**மெலாம்
நற்பது மக்கர ஒத்தி லிலங்கக் கொட்டுக சப்பாணி!
தானத் துறையே அருள்பெறு நெறியென அன்றறி வித்திட்ட
சந்தப் புலவற் கன்புற் றவனே! கொட்டுக சப்பாணி!
கூனற் பிறைமுடி சூடிக் கொருகுரு! குன்ற மெறிந்தவனே!
குணதர! சுசிதர! **தணிமலை** வருகுக! கொட்டுக சப்பாணி!

5. முத்தப் பருவம்

புதுமலர்க்குங் கிரி**தன**க்கும் பிரிய! முத்தந் தருகவே
புனமகட்குஞ் சசிமகட்குங் கணவ! முத்தந் தருகவே
விதுமுடிக்குஞ் சடையர் மெச்சும் புதல்வ! முத்தந் தருகவே
வினைதொலைக்கும் படை பிடிக்குங் கலைஞ முத்தந் தருகவே
பதுமனுக்குங் குறுமுனிக்கும் குருவ! முத்தந் தருகவே
பலனளிக்குஞ் சரணபத்மந் தருக முத்தந் தருகவே
சதுமறைக்கும் பலகலைக்குங் குரவ! முத்தந் தருகவே
தமிழ்மொழிக்குந் **தணிமலை**க்குந் தலைவ முத்தந் தருகவே.

6. வருகைப் பருவம்

அமர ருலகை நிலைசெய் தருளு மொருவ! வருக வருகவே
அடியரிடர்கள் அடியொ டகல அருள்செய் தலைவ வருகவே
குமர முருக அழக குழக அமல **வி**மல வருகவே
குணமு நிறையு மதியு நிறைய அருளு மரச வருகவே
வெமர அணிகள் புனையு நிமலர் சிறுவ குளவ வருகவே
வினைவெ லயிலை மயிலை யுடைய வர**த** பெரும வருகவே
*சமர புரியில் அருணை நகரில் வளரு குரிசில் வருகவே
தணிகை மலையி லிலகு புலவ வருக வருக வருகவே.

---

6. நந்தி வரம் பெற்றது. இவை தணிகைப் புராணத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

*சமரபுரி=திருப்போரூர்

7. அம்புலிப் பருவம்

தண்ணளியி னுலிவன் தனக்கு நீ ஒரு சிறிது சமமெனச்
சொல்வர் புலவோர்
தாண்டவம் புரிசிவன் உனைப்போ லிவற்குமே தலையிடந்
தந்துள்ளனன்
எண்ணரிய கலையெலாம் இவனிடம் நிரம்புமற் றிங்குன**து**
கலைகள் தேயும்
எவ்வகைக் களங்கமு மிலான் **இவன்** உன்னிடம் **களங்கமோ**
என்றும் நிற்கும்
கண்ணன்முத லாங்தேவர் இவனடி பணிந்துதங் காரி**யம்**
நிறைவு பெற்றார்
கழறினேன் உண்மையிஃ தோர்ந்துமக் கஞ்சனைக்
கண்டித்த கதையறிந்தும்
அண்ணல் மறை எண்ணிலவு நண்ணரிய **பண்ணவனொ**
டம்புலீ யாடவாவே
அணிகொள்மயி லேறுநந் **தணிகை**யதி காரியோ
டம்புலீ யாடவாவே.

8. சிற்றிற் பருவம்

அந்தத் தமைத்த மதின்மீதே
ஆடுமயில்வேல் சேவலென்ன!
அப்பா லமைத்த புறக்கடையி
லழகார் வெட்சி கடம்பென்ன!
கந்தப் புகையின் மணமென்ன!
கானக் கருவி அமைப்பென்ன!
கமழ்தே னென்ன! தினையென்ன!
கண்டே தேனே எனத்திதிக்கும்
சந்தத் தமிழ்சொல் அருணகிரி
தனது படிவ அமைப்பென்ன!
சாமீ! இந்தப் படியுனக்குச்
சந்தோடத்தைத் தருவனவாம்
எந்தப் பொருளும் அமைத்துள்ளோம்
எளியேஞ் சிற்றில் அழியேலே!
எழிலார் **தணிகை** மலையரசே!
எளியேஞ் சிற்றில் அழியேலே!

9. சிறுபறைப் பருவம்

சந்நிதியில் நின்று[1] புகழ் அந்தாதி[2] பாடுந் தருணத்தில்
அந்தாதியில்
தணிமலைக் குரியதாம் "சேர்ப்பது[3] மாலெ"னத்
துவக்குந் தனிப்பாடலை
அந்நிலையி லோதுதற் கடியேன் மறந்திடினும் அன்றிரவில்
என் கனவிலே
அண்டியொரு விப்பிரச் சிறுவனைத் தோன்றி உடை
அங்கம் ப்ரகாசமாக
நன்னிறத் தேகத்தில் வெண்ணிறத் திருநீறு
நன்றொளிர எதிரில் நின்று
"நல்ல எலுமிச்சம் பழமொன்று கந்தரந் தாதியில்
மறந்தனை" யெனச்
செந்நெறியை யானுறத் திருவாய் மலர்ந்த இறை
சிறுபறை முழக்கி யருளே!
செந்தமிழி னேயனே செங்கல்வ ராயனே[4]
சிறுபறை முழக்கி யருளே!

10. சிறுதேர்ப் பருவம்

அந்திப் பிறைச் சடையர் அந்தப் பொருட் குரைசெய்
அன்பிற் குகந்த அரசே
அறுமா முகக்குழவி அமுதே எனக்குரிய
அறிவே எனத்துதி சொலி
வந்தித்து நந்திநதி அண்டைக் கணப்பொழுது
சிந்திக்க வந்தருளினை

---

1. "புகழ்=திருப்புகழ்; 2. அந்தாதி=கந்தரந்தாதி.

3. "சேர்ப்பது மாலய நீலோற் பலகிரித் தெய்வ வள்ளி
சேர்ப்பது மாலய முற்றா ரெனப்பலர் செப்பவெப்புச்
சேர்ப்பது மாலய வத்தைமன் யாக்கை சிதைவதன்முன்
சேர்ப்பது மாலய வாசவன் செப்பிய செப்பதத்தே."

கந்தரந்தாதி **59**-ஆம் செய்யுள்

திருத்தணிகை யாண்டவர் இதனை 'நல்ல எலுமிச்சம் பழம்" என்று குறிப்பிட்டதால் இச் செய்யுள் "எலுமிச்சம் பழப் பாட்டு" என இனி வழங்கும்.

4. செங்கல்வராயன்—செங்கல்வம்=செங்கழுநீர்; ராயன்=ராஜன். செங்கழுநீர் மாலை அணியும் ராஜன்—இது திருத்தணிகை மலை முருகருக்குச் சிறப்புப் பெயர்.

வாக்குக்கு மெட்டாது சிந்தைக்கு மெட்டாத
மாயப் பெரும் பொருளினை!
பந்தித்து நின்றவினை சிந்தப் பெருந்துணை செய்
பான்மையுறு மேன்மை பெறுவேல்
பாடிக் கசிந்துருகு நேசத்தை நன்குதவு
பால குமரா குழகனே!
சிந்திப் பவர்க்கருள் செய் செந்திற் பதித்தலைவ!
சிறுதே ருருட்டி யருளே!
சேடனுர் தொழுமொருவி சேடமார் தணிகையிறை
சிறுதே ருருட்டி யருளே!

வேலுமயிலுந் துணை

AN APPRECIATION

BY

T. SIVARAMASETU PILLAI, M.A., B.L.,

Indian Audit and Accounts Service.

SEN TAMIL CHELVI: A TAMIL MONTHLY

I was wondering what to read. Periodicals and Journals; weeklies and monthlies. Light and especially "Comic" penny plentifuls have flooded the Tamil land. I wanted something to my taste—sedate and entertaining, and I found it in the monthly published by the Saiva Siddhanta Publishing Works: Sen Tamil Selvi.

This brave little journal has reached its thirteenth year—a thing to be congratulated in itself. It is printed in fine paper, clear and legible, not fudged in ink—a common pastime of Tamil periodicals.

Its fine print is not its only merit. It contains articles in fine language—Chaste Tamil, in pure vigour and sweet euphony.

You find in Sen Tamil Chelvi, Tamil as it ought to be written and it is pleasing to read it and understand it. Yes, in pure Tamil. And, what variety! Literature (Poetry and Prose), History, Archaeology; Philosophy, and all possible branches of knowledge—something of everything, and that, curiously enough, done well.

A special feature is the translation of the works of the late lion of Tamil literature—Manicka Naicker.

And the translator, Mr. Kannuswamy, with a rare genius for translation, portrays Manicka Naicker's ideas in a manner better than the great master himself, if I may venture to say so. Manicka Naicker threw open several avenues for new thought and all his invigorating ideas are presented in a clear and incisive style.

There are also some articles from the hand of a daughter of Manicka Naicker. It opens a new field—Botany, and if pursued; I look forward to some interesting contributions to, what to me is an ever enchanting field of flowers.

Yet one more—there are some very interesting contributions to the field of Psychology by a young and rising scholar. This is a new and developing science, and an intelligent attempt to co-relate modern ideas with the imbedded philosophic truths of the ancient Tamil world is made. I have spent many pleasant hours with these articles.

To the novice some Sangam Classics are commented upon and annotated in detail. The palm in this respect should be given to the able Pandit who handles "Kurunthogai."

(*Justice, 24 - 11 - 34*)

மதிப்புரை

இந்தியன் ஆடிட் அண்டு அக்கவுண்ட்ஸ் ஸர்வீஸ்

[உயர்திரு. T, சிவராமசேது பிள்ளை எம். எ.,பி. எல். எழுதுவது]

எதைப் படிப்பதென்று புரியாமல் திகைத்துப்போனேன். வாரத்தாள்கள், திங்கட்டாள்கள், விகடன்கள், விநோதன்கள், ஓரணாத் தாள்கள், இரண்டணாத் தாள்கள் எத்தனையோ வந்து குவிகின்றன, எனக்கோ அமைதியும் இலக்கியச் சுவையும் பயக்கவல்ல கட்டுரைகளைப் படிப்பதிலேயே விருப்பம். அத்தகைய கட்டுரைகளைத் திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரால் வெளியிடப்படும் **செந்தமிழ்ச் செல்வி** என்னும் திங்கட்டாளிற் கண்டேன்.

இத் திங்கட்டாள் பதின் மூன்றாண்டுகளாக நடை பெற்று வருவதே போற்றத் தக்கதோர் முதற் சான்றாகும். வெள்ளிய அழகிய தாளில் செம்மையாகவும் சீராகவும் மையழிவில்லாமல் அச்சடிக்கப் பட்டிருப்பது இதன் தனிச் சிறப்பாகும்.

நன்றாக அச்சிடப்பட்டுள்ள சிறப்பேயன்றிச் செந்தமிழில் தூய்மையும் ஆற்றலும் ஓசைநயமும் ஒருங்கே பொருந்தக் கட்டுரைகளைக் கொண்டிருப்பதும் இதன் பெருஞ் சிறப்பாகும்.

செந்தமிழ்ச் செல்வியில் எம்முறையில் தமிழ்நடை இக்காலத்தே இருத்தல் வேண்டும் என்று ஆய்ந்தறிந்த கல்வியாளர் விரும்புவர்களோ அம்முறையிலேயே அமைந்திருப்பதைக் காணலாம். அத்துணையும் கலப்பில்லாத தூயதமிழே! ஆ! எத்தனை வேறுபட்ட பகுதிகள்! இலக்கிய இலக்கணப் பகுதி, வரலாற்றுப் பகுதி, ஆராய்ச்சிப் பகுதி, அறிவியற் பகுதி இன்னும் இவையோன்ற அறிவுவிளக்கும் பகுதிகள் பலவற்றிலும் கட்டுரைகள் காணப்படுகின்றன; வியக்கதக்க வகையில் அத்தனை கட்டுரைகளும் தேர்ந்த சீரிய முறையில் எழுதப்பட்டு வருகின்றன!

தமிழிலக்கியக் கோளரி என்று சொல்லத்தக்க காலஞ் சென்ற திரு. பா. வே. மணிக்க நாயக்கர் அவர்கள் எழுதிய ஆராய்ச்சியுரைகள் இதன்கண் மொழி பெயர்க்கப்பட்டு வெளிவருதல் இத் திங்கட்டாளின் சிறப்பியல்பாகும். மொழி பெயர்ப்புத் துறையிலே தனிப் புலமை வாய்ந்துள்ள திரு. கண்ணுசாமி என்பார் மாணிக்கநாயக்கர் அவர்களின் கருத்துக்களைத் திரு. நாயக்கர் அவர்களினும் மேம்பட்ட வகையில் மொழிபெயர்த்து விளக்கியுள்ளார் என்று கூடத் துணிந்து சொல்வேன். பற்பல புதுத்துறைகளில் தமிழர்தங் கருத்துச் செல்லுமாறு திரு. நாயக்கர் வழிகாட்டினர்; கிளர்ச்சியை யளிக்கவல்ல அப் புதுக் கருத்துகள் யாவும் தெளிவான ஆணித்தரமான நடையில் மொழி பெயர்ப்பாசிரியரால் இத்தாளின்கண் விளக்கி யெழுதப் பட்டிருக்கின்றன.

திரு. நாயக்கர் அவர்களின் திருமகளார் ஒருவராலும் சில கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. மரநூல் என்ற புதியதொரு துறையில் அவை எழுதப் படுகின்றன. தொடர்ந்து எழுதப்படின், என்றும் இன்பமளித்துக் களிப்பூட்டும் இனிய பூக்களைப் பற்றிச் சுவைமலிந்த சில கட்டுரைகளைப் படிக்க வாய்ப்புண்டாம்.

இது மட்டுமோ? ஆற்றல் மிகுந்த இளம் புலவர் ஒருவரால் உளநூற் றுறையில் சுவைபொருந்திய சில கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன். இது புதியதும் வளர்ச்சிக்குரியது மானதோர் அறிவியற் றுறையாகும். அத்துறையில் இக்காலை காணப்படும் புதுக் கருத்துக்களையும் பண்டைக்காலத் தமிழர் தம் தத்துவக் கருத்துக்களையும் ஒன்றுபடுத்தி யுரைக்கும் அரிய முயற்சி இக்கட்டுரைகளிற் காணப்படுகின்றது. இவற்றைப் படித்து நான் மகிழ் வெய்தியுள்ளேன்.

மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் சங்கநூற்களிற் சிலவற்றிற்கு இத் திங்கட்டாளிற் பதவுரை பொழிப்புரை விளக்கவுரை முதலிய எழுதப்பட்டு வருகின்றன. அவ்வாறு உரை யெழுதியுதவுவோரில் **குறுந்தொகைக்கு** உரை யெழுதுந் தமிழ்ப்புலவர் போற்றற்குரியாராவர்.

("ஜஸ்டிஸ்"—24-11-1934).

வரலாற்றுப் பகுதி: History & Biography

டாக்டர் மில்லர்

[திரு. பு. க. முத்துசுவாமிப் பிள்ளையவர்கள்]

[முகப்புப் படம் பார்க்க]

நற்குணங்கள் நிறைந்த டாக்டர் மில்லர் துறை மகனார் ஸ்காட்லாந்து தேசத்துக் கெயித்னஸ் நாட்டில் தர்ஸோ என்னும் நகரில் 1838-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 13-ஆம் நாள் பிறந்தவர். இவர் தந்தை ஒரு பேர் பெற்ற வணிகர். தாயாரும் நல்ல குடும்பத்திற் பிறந்தவர்; நற்குணங்கள் அமைந்தவர். தந்தை பொதுநலத்துக்குப் பாடுபடும் முயற்சி மிக்குடையவர். அவரே தம் மகன் மில்லர் துரையை சென்னை மாகாணத்தின் கல்விக்காக மிகுந்த உழைப்பெடுக்கும்படி ஊக்க மூட்டியவர். தாயாரும் கல்விக்காக மகன் உழைப்பதில் மிகுந்த ஊக்கமே காட்டினார். தாயாருக்கு நேரில் அவர் மகன் செய்துவரும் வேலையைப் பார்க்க முடியவில்லையானாலும், மாணவர் வழியாயும் ஆசிரியர் வழியாயும் கேட்டு அறிந்து கொள்வார். பத்திரிகைகளில் மகன் செயலைப் பற்றி எழுதியிருப்பனவற்றைக் கண்டும் மகிழ்ந்து சொல்வார். நல்ல தாய் தந்தையர்கட்குப் பிறக்கும் பிள்ளைகள் தந்தையினும் பதின் மடங்கு நல்லவர்களாயிருத்தல் இயல்பே.

டாக்டர் மில்லர் இளம்பருவத்திலே கல்வியை மிகுந்த விருப்பமாய்க் கற்றார். அவர் கூரிய அறிவுடையராய் இருந்தமையால் 1856-ஆம் ஆண்டு அதாவது தம் 18-ஆம் வயதிலே எம். ஏ. பட்டம் (கலைப்பெரும் புலவர்) பெற்றுத் தேறினார். அறிவு ஆராய்ச்சியிலும் ஆங்கில உரை நடை எழுதுவதிலும் நன்றாகத் தேர்ந்திருந்தார். அதற்காக அபர்தீன் நகரத்தார் தங்கப் பரிசு ஒன்று அளித்தார்கள். கலை ஆராய்ச்சியில் இவருக்கு மிகுந்த விருப்பம் உண்டு. பின் நான்காண்டுகள் தம் சமய நூலாராய்ச்சியிற் செலவிட்டார். அந்தக் கழகத்தில் (Theological Society) மற்றவர்களோடு வாது புரிவதிலும் புகழ் அடைந்தார்.

அப்பொழுது சென்னையில் ஸ்காட்லாந்து மிஷனின் ஆதரவில் வேப்பேரியில் ஒரு பள்ளிக்கூடம் நடந்தது. அந்த மிஷனில் வேலை பார்த்த ஆசிரியர் எவரும் திறமை உள்ளவர்களாயில்லை. திறமையுள்ள ஆசிரியர் ஒருவர் வேண்டுமென்று ஏற்படவே டாக்டர் மில்லரைச் சென்னைக்கு வரும்படி வேண்டி-

னார். அதற்கிசைந்து டாக்டர் மில்லர் 1862-ஆம் ஆண்டு டிசம்பர் 9-ஆம் நாள் சென்னைக்கு வந்தார். அங்கு வந்த பொழுது அவருக்கு வயது 24. வந்த முதலாண்டில் ஆலயங்களின் வேலையையும் கடமையுமே செய்தார். பின் மிஷன் காரியதரிசியாயிருந்து பல துறைகளிலும் நடக்கும் வேலைகளையும் கண்காணித்து வந்தார். பள்ளிக்கூடத்தின் முன்னேற்றத்துக்கும் அது நன்றாய் நடந்து வருவதற்குமே தமது வலிமையையும் பொருளையும் செலவிட்டார். அவர் உழைப்பின் பயனாய்ப் பள்ளிக்கூடம் நல்ல நிலைமையை அடையவே 1865-ஆம் ஆண்டில் எப். ஏ. வகுப்பையும், 1867-ல் பி. ஏ. வகுப்பையும் வைத்து அதனை முதல்தரக் கலாசாலை (First Grade College) யாக ஏற்படுத்தினார். 1867-ஆம் ஆண்டு கலாசாலைக்கு வாய்ப்பான ஆசிரியர்கள் அமைந்தவுடன் அதனை மிஷனிலிருந்தும் பிரித்துத் தனியே நடத்தற்குரிய முயற்சியைச் செய்தார். 1877-ல் 'சென்னைக் கிறித்துவக் கலாசாலை' என மாற்றப்பட்டு இப்பொழுதும் நன்கு நடைபெற்று வருகின்றது. தம் தாய் நாட்டுக்கு டாக்டர் மில்லர் போயிருந்த பொழுது இந்தியாவின் கல்வி முன்னேற்றத்தில் ஊக்கங் கொண்ட எல்லாரிடத்திலும் சென்னைக் கிறித்துவக் கலாசாலை புதியதாய் அடைந்துள்ள முன்னேற்றத்தையே வெளியிட்டார்.

சென்னை மாகாணத்திலுள்ள கல்வி அதிகாரிகள் பலரிடமும் பள்ளிக்குச்செல்லும் மாணவரின் சீர்திருத்தத்திற்கும், ஒழுங்குக்குமாகச் சில சட்டதிட்டங்களை ஏற்படுத்தி அவர்களை ஒப்புக்கொள்ளும்படி இவர் செய்தார். அரசியலாரால் ஒப்புக்கொள்ளப்பட்ட இச்சட்டதிட்டங்கள் 'சென்னைக் கல்வி இலாகா ஒழுங்குகள்' (Madras Educational Rules) என வழங்கப்பட்டு வருகின்றன. கலாசாலை மாணவர்கள் நாளுக்கு நாள் மிகுதியாய் வரவே இடவசதிகளைத் தம்மாலானமட்டும் முயற்சி எடுத்து விரிவு செய்து கொடுத்தார் மில்லர்.

அயல் இடங்களிலிருந்து வரும் மாணவர்களின் துன்பங்களை மில்லர் உணர்ந்து அதற்காக மாணவர் உணவு விடுதி அமைக்க எண்ணினார்; 1882-ல் கலாசாலையின் பக்கத்தில் ஒரு வாடகைவீடு அமர்த்தி அதில் பார்ப்பன மாணவர் பலருக்குச் சாப்பாட்டுக்கும் தங்கியிருப்பதற்கும் வசதிசெய்து கொடுத்தார். இந்த இயக்கத்தை முதன் முதல் இவர் தென்னிந்தியாவில் ஏற்படுத்தியது குறிப்பிடத் தக்கது. இவ்வியக்கத்தின் நன்மை மிகவே தம்புச் செட்டித் தெருவில் 'சென்னை மாணவர் வீடு' (Madras Students' Home) ஒன்றை அமைத்தார்.

இந்த விடுதி இயக்கம் வெற்றிபெறவே இந்தியக் கிறித்துவ மாணவர்களுக்கும் ஒரு விடுதி அமைத்தார். இவர் காலத்திலே தான் சென்னைத் தர்க்க சபையும், கிரிக்கட் விளையாட்டுச் கூட்டமும் உண்டாக்கப்பட்டன. இவர் முயற்சியினாலே கலாசாலை மாணவர்களுக்குப் படிப்புக்காக உதவித் தொகை வழங்கும் வழக்கமும் 1885-ல் நியமிக்கப்பட்டது.

இக் கலாசாலையில் ஆசிரியருக்கும் மாணாக்கருக்கும் நேராக அமைந்திருந்த ஒற்றுமை மிகவும் பாராட்டத் தக்கது. இக்குணத்தில் டாக்டர் மில்லர் மிக மேன்மையாக வழிகாட்டியவராவர். இவர் ஆலோசனைச் சபையில் (syndicate) ஓர் உறுப்பினராயிருந்து நல்ல தொண்டு ஆற்றி வந்தனர். அதைக் குறித்துச் சென்னைப் பல்கலைக் கழகத்தார் எல். எல். டி. என்னும் பட்டத்தை அவருக்கு வழங்கினர்.

மாணவர்களிடத்து இவர் நடந்து கொண்ட முறையிலே மற்ற எந்த ஆசிரியர்களும் நடந்திருப்பார்கள் என்று நினைக்க இடமில்லை. இவர் தம் மாணவர்களிடத்து மிகுந்த அன்பு காட்டியிருக்கின்றார். ஒரு சமயம் 'பீப்பிள்ஸ் பார்க்' என்ற இடத்திற் பெருந்தீப் பற்றிக் கொண்டபொழுது தம் மாணவர்களைத் தேடித் திரிந் தலைந்திருக்கின்றார். ஒரு நேரம் பெரும் புயற்காற்று அடித்தபோது, வீடு வீடாய்ச் சென்று தம் மாணவர்கள் சுகமாயிருக்கிறார்களா வென்று பார்த்து வந்தார். நோயாய்க் கிடந்த பல மாணவர்களை அவர்கள் படுக்கையிலிருக்கும் பொழுதே, நேரிற் போய்ப் பார்த்து வருவதுண்டு. அவரால் மிகவும் நேசிக்கப்பட்ட மாணவர் ஒருவர் புதைக்கப்பட்டிருந்த கல்லறைக்குக் கண்ணீர் வடியச் சென்று திரும்பி வந்தனர். இன்னும் இரக்க நெஞ்சினையும் தயாள குணத்தையும் காட்டும் அளவில்லா நற்செய்கைகளைச் செய்திருக்கின்றார்.

மாணாக்கர்களிடத்து இவர் காட்டிய அன்பு பழைய குருகுல வாசத்தின் நினைவைக் கொண்டு வருகின்றது. இவ்வருங் குணங்கள் நிறைந்த டாக்டர் மில்லர் துரைமகனுக்குப் பொது மக்களின் பொருளுதவியால் அழகிய உருவச்சிலை ஒன்று செய்யப்பட்டு ஆம்தில் பிரபுவால் (Lord Ampthill) 1901-ஆம் ஆண்டு சென்னைக் கிறித்தவக் கலாசாலைக்கெதிரே நிறுவப்பெற்றது. அதிற் கீழ்க்கண்ட வரலாறு எழுதப்பட்டிருக்கின்றது.

வில்லியம் மில்லர் L. L. D., D. D., C. I. E.,
சென்னைக் கிறிஸ்தவக் கலாசாலை.
பொதுமக்களின் பொருளுதவியால்
நிறுவப்பட்டது. 1901.

ஆராய்ச்சிப் பகுதி-Research

திருப்புகழ்ப் பதிப்பிற்கண்ட தல மாறுதல்கள்

[திரு. கு. குமாரசாமிப் பிள்ளையவர்கள், பவானி]

தேவாரத் திருப்பதிகங்கள் பெற்ற திருத்தலங்கள் யாவும் யாவர்க்கும் இன்னின்ன தலங்கள் இன்னின்ன நாட்டில் உளவென விளக்கமாகத் தெரிவனவாம். அவற்றுள் தனிப் பதிகமின்றி வேறு தலப்பதிகங்களுள் வைத்துக் கூறப்பெறும் வைப்புத் தலங்களை அவ்வாறு காண்டல் அரிதினும் அரிதே. அவற்றை அவ்வந் நாட்டிலுள்ள சைவப் பெரியார்கள் விளக்கி, விபரமாகத் திங்கள் வெளியீடு முதலிய தாள்களில் வெளியிடுவார்களேல் நம் சைவவுலகிற்குப் பெரிதும் நலம்பயப்பனவாகலாம்.

நம் செந்தமிழ்ச் செல்வியில் முன் ஓகால் எளியேன் "கொங்கு நாட்டின் வைப்புத்தல விளக்கம்" எனத் தலைப்பெயரிட்டுக் கொங்குநாட்டிற் காணும் பதின்மூன்று வைப்புத் தலங்களைப்பற்றி, என் சிற்றறிவுக் கெட்டிய அளவு திருவருள் தூண்டச் சைவத் திருமுறைகளின் ஆதாரங்கொண்டும், சாசனங்கள், உலகில் வழங்கும் வழக்கம் முதலியவற்றைக் கொண்டும் வெளியிட்டிருந்தேன்.

இப்பொழுது திருப்புகழை எளியேன் கண்ணுறும் பொழுது இக்கொங்கு நாட்டிலுள்ள இரண்டு திருத்தலங்கட்கு விளக்கமாக உள்ள திருப்பெயர்களை வேறு ஒரே தலத்திற்கு வலிந்து பொருள் கொண்டும், மற்றும் ஒன்றன் திருப்பெயரை வேறோர் திருத்தலத்தின் பெயராக் கருதியும் அச்சிட்டிருப்பன கண்டேன்.

அவற்றுள் "மலரளி கொண்டை" என்ற தலைப்பினையுடைய பழநித் திருப்புகழின் ஈற்றில் வந்துள்ள,

"பதியினில் மங்கைக் கதித்த மாமலை
யொடுசிலை குன்றிற் றரித்து வாழ்வுயர்
பழநியி லின்புற் றிருக்கும் வானவர் பெருமாளே"

என்ற தொடரிற் காணும் "பதியினில் மங்கைக் கதித்த மாமலை" என்பது வள்ளிமலை எனக்குறிப்பெழுதி யுள்ளார்கள் திருவாளர்கள் எம். ஆர். கந்தசாமிக் கவிராயரவர்களும், சு. செங்கல்வராய பிள்ளையவர்களும். ஆனால் எல்லா இடங்களையும் ஒருவர் கண்டெழுதுவதென்றால் எளிதன்று. தேவார வைப்புத் தலங்களை எப்படிக் காண்ப தரிதாக இருக்கின்றதோ அது போன்றதே திருப்புகழ்ப் பாடல் பெற்ற குன்று

தோருடற்றலங்களைக் காண்பதும். அன்றியும் இக்கொங்கு நாட்டிற்றான் குன்றுதோறுடற் றிருத்தலங்கள் மிகுதியாக உண்டு என்பதைஅறிஞர் யாவரும் நன்குணர்வர்.

இஃதிங்ஙனமாக, மேற்காட்டிய தலங்கள் எவை யெனிற் கூறுவல். "பதியினில்=நகரத்தில், மங்கை=விஜய மங்கலத்தும், கதித்தமாமலை யொடு=கதித்தமாமலையுடன், சில குன்றில்=சில மலைகளிலும்", என உம்மைத் தொகையாக்கிப் பொருள் கொண்டு நன்மை யுறுதல் வேண்டும். ஆதலின் இதில் இரண்டு தலங்கள் காண்க.

சோழ நாட்டிலுள்ள தேவாரப் பதிகம் பெற்ற விஜய மங்கை வேறு; இதுவேறாம். திருப்புகழ்ப் பாடல்கள் இரண்டிற்கும் வெவ்வேறாக உண்டு.

இந்த விஜய மங்கலம் என்பது ஈரோட்டிலிருந்து போத்தனூர் செல்லும் இருப்புப் பாதையில் **"விஜய மங்கலம்"** என்ற பெயராலேயே உள்ள புகை வண்டி நிலயத்தின் வடக்கில் இரண்டுமைல் அளவிலுள்ள புராதன நகரமாகும். **"கொங்குவேண் மாக்கதை"** என்ற நூலைப் பாடிய **கொங்கு வேளிர்** வாழ்ந்ததாகக் கூறுவது இந்நகரையே. **சிலப்பதிகாரத்திற்கு** உரைகண்ட **அடியார்க்கு நல்லார்** என்னும் பெரியார் வாழ்ந்த **நிரம்பை** என்ற ஊரும் இந்நகரத்திற் கருகாக உள்ளதே. இத்தொன்னகரில் ஒருசிவாலயமும், முருகப்பெருமான் ஆலயமும் நன்கு விளக்கமாக உள்ளவையே. இக்கோவில்கட்கு, கூனம்பட்டி மடாலயத்து ஆதிசைவ பரம்பரையினர்களாகிய மாணிக்கவாசக ரவர்களால் நித்திய நைமித்திகங்கள் நடத்தப் பெற்று வருகின்றன.

அன்றியும் இங்குச் சமணாலயமும் மிகத் தொன்மையான தாய்ப் பெரிதாக ஒன்றுண்டு. இவ்வாலயத்திற் பல சாஸனங்கள் உண்டு. அவற்றுள் முக்கியமான ஒன்று **கூன்பாண்டியனால்** செதுக்கப்பெற்ற கல்வெட்டாகும். இதனைச் சுமார் இருபத்தைந் தாண்டுகட்கு முன்னர் அக்கோவில் அர்ச்சகராகிய சீநிவாசையர் என்ற ஜைனர் எடுத்து வைத்திருந்த கல்வெட்டுகளின் படியோலைகளுட் கண்டேன். ஆனால் அப்பொழுது அதனைப் படியெழுதிக் கொள்ளும் எண்ணம் எனக்குத் தோற்றவில்லை. இனித் தருணம் வாய்க்கில் அதனை எப்படியாவது படியெழுதிக் கொள்ளவேண்டும் என்னும் எண்ணம் என் சித்தத்தைவிட்டு அகன்றிலது. நிற்க.

"கதித்தமாமலை" என்ற மற்றொரு திருத்தலம் மேற்கூறிய விஜய்மங்கலம் என்னும் புகைவண்டி நிலயத்திற்கு மேற்கில் ஐந்து மைல் தூரத்தேயுள்ள ஊத்துக்குழி என்ற நிலயத்திற் கருகிலேயே வடபுறம் முக்கால்மைல் தூரத்தேதெரியும் குன்றமும், அதன்மீது தெரியும் கோவிலுமேயாம். இத்திருத்தலத்தை இங்குக் கதித்தமலை என்ற பெயராலேயே யாவரும் கூறுவார்கள். இம்மலைக்கு அருகாமையில் உள்ள கிராமங்களிலுள்ள ஆன்பாலார்கட்குப் பெரும்பாலும் தொன்று தொட்டுக் 'கதித்தமலை' 'கதித்தமலை' என்னும் பெயரிட்டு வழங்குவதும் கண்கூடே. இவ்வாலயத்திலும் நித்திய நைமித்திகங்களை முன்னர்க் காட்டிய மாணிக்கவாசகா மடாலயத்தாராலேயே நடத்தப்பெற்று வருகின்றன. தைப்பூசத் திருவிழா மிகச் சிறப்பாய் நடைபெறுவதுண்டு.

இத்திருத்தலத்திற்குத் தென்மேற்கில் சுமார் ஐந்து மைல் அளவில் உடையதே "கொங்கிற் குறும்பிற் குரக்குத் தளியாய் குழகா" எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகளால் ஊர்த்தொகைத் திருப்பதிகத்துட் போற்றப் பெறும் குரக்குத் தளி என்ற தேவார வைப்புத்தலமும். மேற்காட்டிய மூன்று திருத்தலங்களும் இக்கொங்கு நாட்டின் உட்பிரிவு நாடுகளாய இருபத்து நான்கனுள் குறும்புநாடு என்ற நாட்டிலுள்ளனவே. இதற்குக் குறும்பு நாடு என்பது தொன்று தொட்டு இன்று வரை மாறாதுவரும் பெயரென்பது நன்கு விளங்கும். எனவே, மங்கை என்பது **விஜயமங்கல**மென்றும், கதித்தமாமலை என்பது **'கதித்தமலை'** என்றும் வலியுறுத்தியவாறாயிற்று.

மற்றும் ஒன்று

மதுரை என்று திருக்கோயிற்றலைப் பெயரிட்டுப் பதித்துள்ள "கலைமேவு ஞானப் பிரகாச" என்ற தொடக்கத்தையுடையதாய், இறுதியில் "திருவாணி கூடற் பெருமாளே" என்று முடிகின்ற திருப்பாடல், இக் கொங்கு நாட்டில் தேவாரத் திருப்பதிகம் பெற்ற திருத்தலங்கள் ஏழனுள் ஒன்றாகிய திருநணா வென்னும் பவாநி கூடற் றிருத்தலத்திற் குரிய திருப்புகழ்ப் பாடலாகும். எங்ஙன மெனில்,

இத்தலம் காவிரி என்னும் யாற்றுடன் **வானி** என்னும் பெயரையுடைய பவாநியாறு கூடுகின்ற சங்கமுகத் துறையிலிருப்பதால் திருவாணி கூடல் எனவும், பவாநி கூடல் எனவும் பெயர்களைப் பெற்றது. இங்குள்ள கல்வெட்டுகளி லெல்லாம் இத்தலத்துக்குத் திருவானி கூடலென்ற திருப்பெயரையே காணலாம்.

மேலும் "குடகில் வருங்கா விரிபுகு **வானி**க் கொழுநாடு" என்ற திருவவிநாசிப் புராணத்தில் இவ் யாற்றுக்கு வானி என்னும் பெயர் இருப்பது காணலாம்.

அன்றியும், **எட்டுத் தொகை** நூல்களுள் ஒன்றாகிய **பதிற்றுப் பத்து** என்னும் சங்கநூலுள் ஒன்பதாம் பத்தில்

உள்ள அகூ-ஆம் பாடலில் **பெருங் குன்றூர்க் கிழார்** என்னும் புலவர் பெருமான் **இளஞ் சேரலிரும் பொறை** என்னும் சேர வரசனைப்பற்றி, "இளஞ் சேரலிரும் பொறையை எல்லாரும் வெருவரச் செருக்களம் புலவக் கொன்றமர்க் கடந்த தடக்கைப் பொறைய னென்று சொல்லுகையாலே, யான் அவனை வெப்பமுடையா னொருமக னென்று கருதினேன்; அஃது இப்பொழுது கழிந்தது; அப்பொறையனாகிய பாடுநர் புரவலன், ஆடு நனை அண்ணல், யான் தன்னொடு கலந்திருந்த வழித் தன்னாட்டு வானி யென்னும் யாற்று நீரினும் சாயலனா யிருந்தான் றானென்" என்று வரும் பழைய உரையையுடைய பாட்டில்,

"புனல்பாய் மகளி ராட வொழிந்த
பொன்செய் பூங்குழை மீமிசைத் தோன்றுஞ்
சாந்துவரு வானி நீரினுந்
தீந்தண் சாயலன் மன்ற தானே"

என்ற அடிகளால் வானி யாற்றின் தன்மையை விளக்குகின்றார். மேற்கூறிய சேரன் வெம்மையனல்லன், தன்னாட்டு வானி நீரினுந் தண்ணியன் என்றதனால் அது விளங்குகிறது. இவ் யாறு நீலகிரியில் உற்பத்தியாகி வருவதால் என்றும் மிக்க தண்மை யுடைத்திருத்தல் இயல்பே. கண்கூடாகுமே.

இவ் யாற்றிற்கு வானி என்ற பெயர் இங்ஙனஞ் செய்யுள் வழக்கிலேயன்றி, உலக வழக்கிலும் பெரும்பாலும் சாதாரணமாக எல்லா மனிதர்களாலும் இங்குக் கூறுவதையுங் காணலாம். அல்லாமலும் இவ்வாற்றங் கரைகளிலுள்ள இரண்டூர்களுக்கு மேல்வானி, கீழ்வானி என்ற பெயர்களிருப்பதை இப்பொழுதுங் காணலாம். ஆனால் வானி யென்பதை வாணி எனத்திரித்து வழங்குவோரும் சிலருண்டு. இவ்வாற்றுக்கு வேறாக உள்ளதாய்த் தற்போது கோவைமா நகர்க்குத் தீந் தண்ணீர் தருவதாய் வெள்ளியங் கிரியினுச்சியி னின்றும் பாய்கின்ற ஆற்றுக்குச் சிறு வாணி என்னும் பெயரிருத்தலும் இதனை வலியுறுத்தும்.

அங்ஙனமாயின் பவானி என்ற பெயர்க் காரணம் யாதெனில், தூர்வாச முனிவர் சிவபெருமானை வழிபாடற்காத் தவங் கிடந்த ஞான்று, சிவபெருமானுக்குரிய ஆண்பாற்பெயராகிய பவன் (பரதிவ்யோ பவ:) என்றதற்கும் பொருந்தப் பவானி என்னும் பெண்பாற் பெயரையுடைய அம்பிகையின் திருவருளா லிவ்யாறு பெருகி வந்தமையாற் போந்த பெயராகும்.

"அலம்புரி பவநீத் தோங்கு மருந்தவத் தருவாச
னலம்புரி தவத்தால் வேத நாயகி யருளே நல்ல

சலம்பயி னதியாய்த் தன்பேர் தரித்திரு கரையுந் தூய
வலம்புரி யினங்கள் வீசி வருதிரைப் பவானிக் கீழ்பால்."

அதனை என்ற பவானி கூடற்புராணத் திருவிருத்தத்தாற் காண்க.

ஆதலின், இதுவரை கூறியவற்றி லிருந்து வானி என்ற பெயர் திருநணா என்னுந் தலத்திற் காவிரி யாற்றிற் கூடும் யாற்றின் பெயரெனவும் திரு என்பது தலத்திற்கு அடையெனவுங் கொள்க. வாணி என்பது மரூஉ மொழியாகக் கொள்க. இவ்வாறு வழக்கிலிருப்பதும் மேலே காட்டிய தொன்றாம்.

அன்றித் தென்மதுரைக்குங் கூடல் என்ற பெயர் உண்மையின் அது வாணி கூடியதால் வந்த பெயரன்று. சோமசுந்தரக் கடவுளால் விடுத்த மேகங்கள் நான்கு மாடங்களிலும் கூடியதால் வந்த பெயராம். அது நான் மாடக்கூடல் என்பதாம். திருப்புகழ்ப் பதிப்பாளர்கள் வாணி கூடலென்பது மதுரையெனக் கொண்டது அதனில் தமிழ்ச் சங்க மிருந்தமை கருதியே போலும். அது பொருந்தாத தாகும். அன்றி மதுரைக் குரியவேறு குறிப்புகளொன்றும் அப்பாடலில் வரவுங் காணேம்.

அப் பாடலும் இது:

கலைமேவு ஞானப் பிரகாசக்
    கடலாடி ஆசைக் கடலேறி
பல மாய வாதிற் பிறழாதே
    பதிஞான வாழ்வைத் தருவாயே
மலை மேவு மாயக் குறமாதின்
    மன மேவு வாலக் குமரேசா
சிலை வேட சேவற் கொடியோனே
    திருவாணி கூடற் பெருமாளே.

ஆதலின், "திருவாணி கூடல்" என்ற பெயர் திருநணா வென்னும் பவானி கூடற் றலத்திற் குரிய பெயரென்பதை இங்குள்ள கல்வெட்டு, தல புராணங்கள், சங்க நூல், உலக வழக்கு முதலிய பலவகை யாதாரங்களாலும் வலியுறுத்தப் பெற்ற தொன்றாதலினால், இத்திருப் புகழைப் படிப்பவர்கள் யாவரும் உண்மை யுணர்ந்து படித்து நலம் பெறுவார்களென நம்புகின்றேன்.

"மலரளி கொண்டை" என்ற தலைப்பினை யுடைய பழநித்திருப்புகழிற் காணும் "பதியினில் மங்கைக் கதித்த மாமலை" என்பன இரண்டும் மேலேகாட்டிய இரண்டு தலங்களென்பது தெளிவாயிற்று.

இனிமேல் திருப்புகழைப் பதிக்கும் பெரியோர்களும் திருவாணி கூடல் என்பது மதுரையின்றித் திருநணா என்று திருத்திப் பதிப்பார்களெனவும் நம்பி வேண்டுகின்றேன்.

செய்திகளும் குறிப்புகளும்
News and Notes

தூத்துக்குடிச் சைவசித்தாந்த சபையின் 51-ஆம் ஆண்டு நிறைவு விழா

1934ஆம் டிசம்பர்மீ 29, 30-ஆம் நாட்களில் கோயமுத்தூர் உயர் நீதி மன்ற வழக்கறிஞர் "இராவ் சாகிப்" C. M. இராமச்சந்திரஞ் செட்டியாரவர்கள் B.A., B.L. தலைமையில், திருவாளர். சுந்தரஓதுவா மூர்த்திகள் இன்னிசைத் தேவாரம் இடை இடையே ஓத, பல அன்பர்கள் அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். அவைத் தலைவரவர்கள் தலைமையுரை படித்ததும்,

திருவாளர்கள் லால்குடி அ. மு. சரவண முதலியாரவர்கள், ஜலகண்டபுரம் அ. வரதநஞ்சைய பிள்ளையவர்கள், நாகர்கோயில் K. ஆறுமுகம் பிள்ளை அவர்கள் முறையே "நீலகண்டர் மனமும், ஆலமுண்டான் சினமும்" "திருவருட் செயல்", "கோவில்களும் உருவ வழிபாடுகளும்", என்னும் பொருள்கள் பற்றி இனிமையாய்ப் பேசினார்கள்.

மறுநாள் திருவாளர். மா. வே. நெல்லையப்ப பிள்ளையவர்களால் சைவ சித்தாந்தப் பொருள் பற்றிய ஐயத்தெளிவுகள் நீக்கப் பெற்றதும், திரு. மா. கிருஷ்ணப் பிள்ளையவர்கள் பெண்பாடசாலை மாணவிகளால் ஸ்ரீ சுந்தர மூர்த்தி நாயனார் வரலாறு நடித்துக் காட்டப்பட்டது. பின்பு, திருவாளர்கள், அ-வரதநஞ்சைய பிள்ளையவர்கள், சென்னை வித்துவான். தாணு அம்மாள் அவர்கள், அ. மு. சரவண முதலியாரவர்கள் முறையே "இளையான் குடிமாற நாயனார்" "மங்கையர்க்கரசியார்", "திருவாதவூரடிகட்குபதேசம்", "முருகன்" என்பன பற்றி விரிவுரை ஆற்றினர்.

தமிழாசிரியர்க்கு அரசினர் குறைத்த சம்பளத்தைப் பற்றிக் கண்டித்துப் பேசியபின் ஏனைய ஆசிரியர்க்குப் போல் அவர்க்கும் தக்க சம்பளம் தருதல் வேண்டும் என்ற தீர்மானமும், நிறைவேறிற்று. மூன்றும் நாள் சென்னை வித்துவான். தாணு அம்மாள் அவர்கள் தலைமையிற் சைவ மங்கையர் மகாநாடு கூடிற்று. தலைவர் முன்னுரையின் பின் சைவ மங்கையர் விரிவுரைகள் நிகழ்த்தினார்கள் இரவு மணி 8½-க்கு மகாநாடு இனிது நிறைவேறிற்று.

நா=நாவு, நோம்பு - நுணவு என வந்தது.

நா - நாவு, நாக்கு

பெயர்ச்சொல்

[ந்+ஆ+உ=நாவு=நா] உயிர்க்கினிமையான சுவையைத்தான் கண்டு உள்ளுக்கும் புற உறுப்பா யமைதலின், வினைமுதற் பொருண்மைத் தொழிலாகு பெயராய், நா=நாக்கு எனலாயிற்று. அன்றியும் உயிர் உள்ளில் விளைக்கும் எண்ணத்தை ஆகும் விதத்தில் தன்னில் அமையும் சொல்லால் வெளிப்படுத்த நடுக்கொண்டிருக்கும் உறுப்பாதலின் நா=நாக்கு என்னும் அமைதியும் பொருந்தும். (இதுவும் வினைமுதற் பொருண்மையே).

தாலநீதாலு நாவெனச் சாற்றுவர். —**திவாகரம்**

நா - வெண்கல மணியின் நாக்கு

பெயர்ச்சொல்

[ந்+ஆ+உ=நாவு—நா] வெண்கலத்தா லமைக்கப்பட்டுத் தோற்றத்தினாகிய வெண்கலமணியின் உள்ளுக்குள் கலந்து விரவி நிற்கும். அந்த மணியின் உயிர்போன்ற ஓசையாகிய நாதத்தை நடுநின்று தன் அசைவிலும் தாக்குதலிலும் வெளிக்கிளப்பி, நாக்கினது தன்மையை உவமையாகக் கொண்டிருத்தலின், நா=வெண்கல மணியின் நாக்கு எனவும் வழங்கல் ஆயிற்று.

நா - சோல்

பெயர்ச்சொல்

[ந்+ஆ+உ=நாவு=நா] நா=நாக்கு என முற்கூறிய அமைதிப்படிக்கு வழக்கம் பெற்றுப் பின் இடவாகு பெயராய் நா என்பது நாவினின்றும் பிறக்கும் சொல்லுக்கும் அமையும். உதாரணம், நாவுறுதி=சொல் உறுதி, நாவன்மை=சொல் திறமை; நாவரசர்=வாகீசர் - சொற்றிறமையுடைய அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவராகிய அப்பர். என்பவற்றாலுணர்க.

நா - கதவிலிட்டிருக்கும் தாள் அல்லது சங்கிலி, பூட்டினுள் ஆணி.

பெயர்ச்சொல்

[ந்+ஆ+உ=நாவு=நா] வாய்க்குள் நாவைப்போல் ஓர் மனைவாயிலுள் கதவில் பூட்ட விட்டிருக்கும் சங்கிலியும் நா

வென்னும் பெயர் பெறும். இது உவமையாகு பெயர். இவ் வண்ணமே பூட்டின் நடுவிலிருக்கும் உள்ளாணியும் நாவென்னும் பெயர் வழங்கும். இவற்றிற்கு நிலையிற் சங்கிலி மாட்டத் தைத்திருக்கும் பூட்டுறுப்பை 'நாதாங்கி' என்பதையும், பூட்டின் நடுக்கதிர் வீழ்ந்துவிட்டால் பூட்டுக்கு நாக்கில்லை, நா வீழ்ந்துவிட்டது என்பதையும் உலக வழக்கத்திற் கண்டு கொள்க.

நா - நடு

பெயர்ச்சொல்

[ந் + ஆ + உ = நாவு = நா] உட்புகுவதற்கும் வாய்வழி வெளிப்படுவதற்கும் தன்னில் அல்லாது இயலாவிதத்தில் இடைப்பட்டிருப்பதே நா. ஆதலின் நா = நடு என்னும் இடப் பெயராயிற்று.

நா - பொலிவு

பெயர்ச்சொல்

[ந் + ஆ + உ = நாவு = நா] உயிரின் உண்ணிகழ்ச்சியாகிய குறிப்பைத் தானே நடுக்கொண்டேந்தி வெளிப்படுத்துதலின், நா = பொலிவு எனலாயிற்று. அகத்திற் குறி முகத்திற் காட்டும் என்பதனாலும் உணர்க.

பா - பரப்பு

வினைச்சொல் - ஏவல்

[ப் + ஆ + உ = பாவு = பா] பாரம் உள் இருப்பை மறைத்துக் கவிந்து நிற்கும் பொதியைக் காட்டுவது. ஆதலின், ப் - பொதிவு, ஆ - ஆதல், உ - மேற்கோள், இடைப்படு—வெளிக் கொள் (மதுநிலை பற்று, ஒன்றின்மேற் பொதிவாக ஓர் பொருளைப் பரப்பு என அமைதலால், பா = பரப்பு எனல் ஆயிற்று. தரையில் வரிசைப்படப் பரப்பிய கல், பரவு கல் என்னும் வழக்கும் காண்க.)

பாவெனப் பனுவனூற்பா
பரவுதல் பரப்புமாகும். —சூடாமணி நிகண்டு.

பா - நடு, (நட்டு வை - பதி)

வினைச்சொல் - ஏவல்

[ப் + ஆ + உ = பாவு = பா] ஓர்வகைப் பொருளை ஓரிடத்தின் பொதிவாக வளர்ந்தோங்கப் பதித்து வை எனப்படுத லின், பா = நடு எனல் ஆயிற்று. இது வயலில் நாற்றுப் பாவு என்பது போல்வது.

பா - பரம்பு

வினைச்சொல் - ஏவல்

[ப் + ஆ + உ = பாவு = பா]—விழியில் நீர் பாவப் பார்வை மங்கியது என்பதில் விழியில் ததும்பிய கண்ணீர் பரம்பப் பார்வை மங்கியது என்பதுபோல், பா = பரம்பு எனலாயிற்று.

பா - பற்று

வினைச்சொல் - ஏவல்

[ப் + ஆ + உ = பாவு = பா]—பொதிவு ஒன்றைப் பற்றிப் பிடித்தும் தனக்குள் மறைவிக்க நிகழும் ஆகையால், பா - பற்று என்னும் பொருளதாயிற்று. உதாரணம் மதிப்பகை பாவப்பாவ சந்திரனில் முக்காற் பங்கு மறைந்துவிட்டது. அழுக்குப் பாவப்பாவ ஆடை கரித்துணி யாயிற்று. இவற்றுள் பாவ = என்பது பற்றிப் பிடிக்க எனப் பொருள்படுதல் காண்க.

பா - வேர்வை (வேரூன்று)

வினைச்சொல் - ஏவல்

[ப் + ஆ + உ = பாவு = பா] நிலை உயிர்ப்பொருளாகிய மரம் செடி முதலியவற்றை நிழற்பொதிவுக்காகக் கிளை தறித்து நடுவதில், அது வேரூன்றியே தளிர்த்துக் கிளைத்து வளர வேண்டுமாதலின், பா = வேர்வை எனல் ஆகும் - அலரிக்கிளை நட்டதில், இப்பொழுதுதான் பாவித் தளிர்த்துக் கிளைக்கின்றது - என்பதில் பாவி என்பது வேர் பிடித்து எனப்பொருள் படுதல் காண்க.

பா - பகுத்துக்கொடு

வினைச்சொல் - ஏவல்

[ப் + அஃக = பக = பா] ப் - பொதுப்படையாகிய பொதிவைக் கொண்டிருக்கும் பொருளை, அதன் பங்குரிமைக் கேற்றபடி அவரவர்க்குத் தமக்குள்ளடங்கி அஃகப் பிரித்துக்கொடுக்க என்றாகலின், பா = பகுத்துக்கொடு என்றாகும். இவ்வமைதியில் வியங்கோள் ஏவலாக மாறி வந்தமை காண்க.

பா - பங்கிட்டெடு

வினைச்சொல் - ஏவல்

[ப் + அஃக = பக = பா] பொதுப்பாட் டுரிமைகொள் பொருளில் தன் பங்குக்கு உரிமைப்படு பொருள் தனக்கடங்கி

அஃகப் பிரித்தெடுத்துக் கொள். எனப்படுதலால், பா = பங்கிட்டெடு எனல் ஆயிற்று. இதுவும் பா = பங்கு கொடு வென்பதும் மற்றப் பாவு என்னும் வினைபோலாகாது, பாத்தது, பாக்கிறது, பாக்கும், பாக்காதது என முக்கால வுடம்பாட்டையும், எதிர்மறையையும் ஏற்கும்.

பா - விரி

வினைச்சொல் - ஏவல்

[ப் + ஆ + உ = பாவு = பா] இடப்பொதிவாகப் பரவி விரிபடு எனவாகலின் பா = விரி எனலாயிற்று. பாவாடை = பரவி விரிந்த ஆடை, விரிகின்ற ஆடை, விரியும் ஆடை ஆகவும், நடைப் பாவாடை என்பதில் நடைவழியில் விரித்திடும் துணியாகவும் நின்று இப்பெயர் அமைதி பெறுதல் காண்க.

பா - தாண்டு (சாடு)

வினைச்சொல் - ஏவல்

[ப் + ஆ + உ = பாவு = பா] பொதிந்து வரை தாண்டி மறுநிலைகொள் எனப்படுதலின், பா = தாண்டு என்றாயிற்று. ஆற்றின் பெருவெள்ளம் அணை பாவி இப்புறம் வந்துவிட்டது என்பதில் பாவி என்பது தாண்டி எனும் பொருள்பட நிற்றல் காண்க.

பா - துதி (சீர் பரப்பு)

வினைச்சொல் - ஏவல்

[ப் + ஆ + உ = பாவு = பா] பொதிவாய்க் கவிந்துள்ள சீரை வெளிக்கொண்டு பரவச் செய் எனலின் பாவு, பா = துதி எனலாயிற்று. துதிகூறிப் புகழ்பெருக்கு (வணங்கி வழிபடு.)

பா - சீர்பரப்பல், தாண்டல், விரிப்பு - வேரூன்றல், பற்றல், பரம்பல், நடவு, பரப்பல்

தொழிற்பெயர்

[ப் + ஆ + உ = பாவு] இது செய்யுள் உவ்விகுதி புணர்ந்து குன்றித் தொழிற்பெயராகி மேற்கண்ட ஒவ்வோரமைதிப்படி, பாவென்பது சீர் பரப்பல் (துதி), தாண்டல் (சாட்டம்), விரிப்பு, வேரூன்றல், பற்றல், பரம்பல், நடவு, பரப்பல் எனவும் வழக்குப் பெறும்.

பா - அழகு

பெயர்ச்சொல்

[ப் + ஆ = பா] ஓர் பொருளின் மேற்பொதிவாய் அமைதலின், பா - அழகு என்னும் பண்புப்பெயர் ஆயிற்று.

பா - கடிகார வூசி

பெயர்ச்சொல்

[ப் + ஆ + உ = பாவு = பா] பொதிவாகிய நிலையில் வட்டமாய்ச் சுழன்று பாவி வருமோர் கதிராய்க் கடிகாரத்தின் நடுக்கொண்டிருத்தலின், பா - கடிகார வூசி என்னும் பொருட்பெயராயிற்று. (வினைமுதற் பொருண்மை).

பா - நிழல்

பெயர்ச்சொல்

[ப் + ஆ + உ = பாவு = பா] ஓர் பொருளின் பொதிவாய் எழுந்து அதன் மேலாகவோ, கீழ் ஆகவோ, சார்பாகவோ சுடரொளிக்கு எதிர்முகமாய்க் கவிந்து பாவிக் காணப்படுதலின் பாவென்பது நிழல் என்னும் பண்பாயிற்று. (இஃது செயப்படு பொருண்மை).

பா - நெசவு பா

பெயர்ச்சொல்

[ப் + ஆ + உ = பாவு = பா] அலகுநிலை என்னும் பாக்குச்சு முதலிய நெசவு கருவியின் மேல் இழையாகப் பாவிப் பாவி அமைக்கப்படுதலின் பாவென்பது நெசவு பாவெனலாயிற்று. (இதுவும் செயப்படு பொருண்மையே).

பா - பஞ்சிநூல்

பெயர்ச்சொல்

[ப் + ஆ + உ - பாவு = பா] பஞ்சு நூற்குங் கதிரின் வழியாகப் பரம்பி விரிதலுற்று, இழையாகும் தன்னிற் பாவைப் பாவிப் பாவிக் கொள்ளக் கிடந்து, பாவின்மேற் பொதிவாகவும் காரணம் விளக்கி நிற்றலின், பா = பஞ்சிநூல் எனலாயிற்று. (ஆகுபெயர்).

பா - பாட்டு

பெயர்ச்சொல்

[ப்+ஆ+உ=பாவு=பா] மேல் விளக்கியபடி, பஞ்சு நூற்கப்பட்டு நூலாகிய பாவுக்குக் காரணமாய் பாவைப் பொதிந்து எவ்வண்ணம் நிற்கின்றதோ அவ்வண்ணமே 'பஞ்சிதன் சொல்லாப் பனுவலிழையாகச் செஞ்சொற் புலவரே சேயிழையா - விஞ்சியதன் கையே வாயாகக் கதிரே மதியாக மையிலா நான்முடியு மாண்பு' என்னும் ஆன்றோர் அமைதிப்படிக்கே, சொல்லாகிய பஞ்சி புலவராகிய சேயிழையால், கையே வாயாகவும், கதிரே மதியாகவும் கொண்டு, நூற்பாவி யாப்பில் அமைக்கப்படும் பனுவலாகிய பாட்டிழை, நெசவு பாவின் மேற்பொதிவாகிக் காரணம் விளக்கி நிற்றலுக் கொப்ப, யாப்புப் பாவின் பொதிவாகவும் காரணம் விளக்கி நிற்றலினால், உவமையாகு பெயரதாய், பா=பாட்டு எனல் ஆயிற்று.

பா - பிரபந்தம்

பெயர்ச்சொல்

[ப்+ஆ+உ=பாவு=பா] மேற்கண்ட அமைதிப்படிக் குள்ள பனுவலென்னும் பாவின் தொகுதியே பிரபந்தத்தின் பொதிவாய் நின்று காரணப்படலின், ஆகுபெயராகவே, பா - பிரபந்தம் எனக் கொள்ளலாயிற்று.

பா - பிரபை (ஒளி)

பெயர்ச்சொல்

[ப்+ஆ+உ=பாவு=பா] ஓர் பொருளின் மேற்பொதி வாய்ப் பாவி நின்று இயங்குவதாதலின், பா=பிரபை யென் னும் ஒளி எனலாயிற்று.

பா - கிழங்கின் பா

பெயர்ச்சொல்

[ப்+ஆ+உ=பாவு=பா] கிழங்கின்மேற் கவிந்து சூழ்ந்து மூடிக்கொண்டிருப்பதோர் பொதிவுறுப்பாதலின், பாவென்பது கிழங்கின் பாவெனலாயிற்று. அன்றியும், 'பா' என்பது ஆட்டினம், மறி இவற்றைக் கூவி அழைப்பதற்குத் துணைப்படுமொலி.

கப்பம் கொண்டு அவர்கள் வணங்க வெற்றிகொண்டு, வடித்த வாளா யுதத்தைத் தாங்கியவர்களாய்க் கோட்டைகளைக் கைப்பற்றிக் காக் கின்ற படைவீட்டவர்களான ஐந்துகோட்டை வளநாட்டவர்களான மறவர்கள்.

(கஉ)

சொக்கர்பா கத்திலுறை துக்கையோ கந்துகர
பக்கமாகப் பழுவைநேர்
தொடுவளை தடிப்படை யெனக்கொடுத் துக்கிரத்
தோன்றலுக்குத் துணையெனும்
மக்களா கப்பஞ்ச லட்சுமியை யுந்திரு
மணஞ்செய்வித் தவனிகாக்கும்
வழுதிக் களித்துல குனக்குமொரு பாதியிவ
ருக்குமொரு பாதிமனுநீ
திக்குநா லுக்குமுறை யாக்கிணைச் சக்கரச்
செங்கோ னடாத்து மெனவே
திருவுள முரைத்தவை காமருள் பரிக்கவரு
தேவதலை மைப்பெயரினோர்
கொக்கைமா றன்பாதி பாதிகா வலவர்செங்
கோன்மைவழு வாதுவடிவாட்
கோட்டையிடு கின்றபடை வீட்டவர்க ளேவைந்து
கோட்டைவள நாட்டவர்களே. கரு

மதுரைச் சொக்கநாதரின் வாமபாகத்துறையும் பார்வதியாரின் வயிற்றின் பக்கமாகவுள்ள விலாவெலும்பை ஒப்ப விளங்கும் வளைந்த 'வளைதடி' என்பதை ஆயுதமாகக் கொடுத்து, உக்கிர குமாரபாண்டியனுக்குத் துணைவர்களான மக்களாக, ஐந்து இலக்குமி களையும் திருமணம் புரிவித்துப் (ஐந்து இலக்குமிகளின் அருளையும் பெற்று) பூமியைக் காக்கும் பாண்டியனுக்குக் கொடுத்து; 'இராஜ்யம் உனக்கு ஒருபாதியும் இவர்களுக்கு ஒரு பாதியும்' எனக் கூறி; 'மனு நீதி முறைப்படி நான்கு திசைகளிலும் ஆணைச்சக்கரத்தை நடத்திச் செங்கோல் புரியுங்கள்' எனவும் அழகிய மனத்தோடு கூறிய மொழி களை விருப்பத்தோடு பெற்று உலகு காவலைக்கொண்ட தெய்வத் தன்மை மிக்க சிறப்பான் மிகுந்த பெயரினையுடையோர்: யாரெ னில், கொற்கைநகரத்திருந்து அரசுபுரியும் பாண்டியனுக்குரிய பாதி போக, மற்ற பாதிக்குக் காவலர்களாகச் செங்கோல் செலுத்தும் முறைமையில் தவறிடாத வழக்கப்பட்ட வாளாயுதத்தைக் கொண்ட

வர்களாய்க் கோட்டைகளைக் கைப்பற்றிக் காவல் புரியும் படைவீட்டவர்களான ஐந்து கோட்டை வளநாட்டவர்கள் எனும் மறவர்கள்.

சொக்கலிங் கமும்முலைத் தடாதகை தனைச்சுய
மங்கலஞ் செய்துக்கிரத்
தோன்றறனை யேபயின் றரசுரிமை செய்யமுடி
சூட்டியர சாளவைத்துத்
திக்குவிச யக்கயற் கொடிசெண்டு வேல்திகிரி
செங்கையதனிற் கொடுத்துச்
செய்கைக்கு மெய்க்கா யிரம்பொன் கொடுத்தரிய
சேவகங் கொள்கவெனவே
மக்கடனில் மிக்கஅரி யரபுத்தி ரன்றன்னை
வரிசைஒண் டொடியில் வைத்து
மனுமுறை வழாதுலகு தனியரசு புரிகவென
வாக்கருள அரசுரிமையுங்
கொக்கைமா றன்றனைச் சேவித்த சாத்தனொடு
கூடவொரு வாசலர்கள் வாட்
கோட்டையிடு கின்றபடை வீட்டவர்களைவந்து
கோட்டை வள நாட்டவர்களே. ௧௪

மதுரைச் சொக்கநாதப் பெருமான் மூன்று தனங்களோடு மலயத்துவசனுக்குத் தோன்றிய தடாதகைப் பிராட்டியாரை மணந்து, உக்கிரகுமார பாண்டியனைப் பெற்றளித்து அரசுரிமையும் கொடுத்து முடி சூட்டுவித்து அரசாட்சி புரியச்செய்து, திசைதோறும் படை கொண்டு சென்று வெற்றிமிக்க மீனக்கொடியையும், செண்டு எனும் ஆயுதத்தையும், வேலாயுதத்தையும், சக்கராயுதத்தையும் செம்மையான கைகளில் அளித்து, 'அரியசெயல் செய்வார்க்கு ஆளுக்கு ஆயிரம் பொன் கொடுத்து அன்னார் சேவகமாகிய (வீரச்) செயலையும் கொள்க' என்றுகூறி, மக்களில் சாத்தனாரை முறையில் வீரவளைகளோடு முதலில் அமர்த்தி; 'மனுநீதிமுறை தவறாமல் உலகைத் தனிப்பட ஆட்சிபுரிவாயாக' என்று நல்வாக்கையுமருளி அரசாட்சி யுரிமையையும் (பெற்று) கொற்கைப் பாண்டியனை வணங்கிய சாத்தனோடு தாமும் வாயிலில் விளங்குவோர். வாளைக் கையிற்கொண்டு கோட்டைகளைக் கைப்பற்றிக் காவல் புரியும் படை வீட்டவர்களான ஐந்து கோட்டை வளநாட்டவர்கள் எனும் மறவர்கள்.

பூதண்ட லோகமெங் குந்தனை ணைக்குண்மனு
முறைசெல நடாத்துசெங்கோன்
முழுதுமொரு நாளதிற் பகல் வழுதி காவலாய்
முறைமைபெற வாசியற்ற
ஏதங்க ளண்டாதி ராவங்கள் நிலமெங்கு
மிவர்காவ லாய்நகர்தொறு
மிருப்பூசி போகையிற் பொன்னூசி யேகொடுத்
தெண்டிசைக் கம்ப நாட்டில்
பாதங்கொள் பாரெங்கு மேவந்து திறைகண்டு
பரவுபுய வலியசூலகிலப்
பாதிகா வலவரென் றுதிநூல் விதிதொறும்
பகருமதி காரமுடையோர்
கோதண்ட பாணிதோழமை கொண்ட கானவன்
குலதீப ருலகில் வடிவாட்
கோட்டையிடு கின்றபடை வீட்டவர்க ளைவந்து
கோட்டைவள நாட்டவர்களே. ௧௫

தேவலோக மளவும் தங்கள் ஆணைக்குள்ளாக மனுநீதி முறைக் கேற்பச் செங்கோல் நடத்தி, உலகமுழுவதும் ஒரு நாளில் பகற் பொழுதிலேயே கைப்பற்றிக் கொடுத்துக் காவலாக்கி முறைமைப் படி இசைப்பாட்டுப் பாடி நிற்ப, குற்றங்கள் சாராத உலகில், நிலத்தி லெங்கும் இவர்கள் காவல் புரிவோராய், நகர்தோறும் இரும்பினாலாகிய ஊசியைப் பெறுவார் பொன்னூசியையே கொடுக்கும் அத்தகைய செல்வம் மல்கி, எட்டுத் திசைக்கம்பம் விளங்கும் நாட்டினிடத்தில், பாதத்தைத் தம் முடியிற்கொண்டு பணியுமாறு பூமியிலுள்ள அரசர்களும் பிறரும் வந்து கப்பத்தை யளப்பது கண்டு மகிழும் விசாலமான தோள் வலிமையினால் உலகில் பாதிக்குக் காவலர்கள் என்று முதல் நூல் எனப்படும் வேதமுறைப்படி சொல்லப்பெற்ற அதிகாரத்தை யுடையவர்கள் யாரெனில், கோதண்டம் என்னும் வில்லைக் கையிற் கொண்ட இராமபிரானது தோழன் என அப்பெருமானால் கொள்ளப்பட்ட மறவனான குகன் என்பானது குலதீபர்கள் எனப்படும், உலகில் வாளாயுதத்தை ஏந்தியவர்களாய்க் கோட்டைகளைக் கைப் பற்றிக் காவல் புரியும் படை வீட்டவர்களான ஐந்து கோட்டை வள நாட்டவர்களென்னும் மறவர்கள். ௧௫

மானில முயப்பெய்ய மழைகொண்டு வரவன்று
வானவர்க் கிறையுலகிலே
வழுதிசெலு நாட்கையிலத் திருவாழி மோதிரமு
மார்பிலணி நிம்பமாலை
நானியற் றிடுதனிக் கோல்வழு விடாமுறை
நடாத்துக வெனக்கொடுக்க
நரபால கங்கனருள் வெகுராச வரிசைபெறு 1
நாமநவில் நூல்விதியினோர்
மீனவ னுயர்த்தகயல் மேல்வளை தடிக்கொடியை
மேருவிற்பொறித் தாழிசூழ்
மேதினியி னிற்பாதி காவலவ ராய்மனு
விளங்கிய பெரும் புகழினோர்
கோனிவ னெனச்சொல்ல வேபகர் கோன்மையுங்
கொண்டவர்கள் வென்றிவடிவாட்
கோட்டையிடு கின்றபடை வீட்டவர்க ளேவைந்து
கோட்டைவள நாட்டவர்களே.

கசு

பூலோகத்தவர்கள் பிழைக்கும் பொருட்டாக மழையைக் கொண்டு வரவேண்டுமென்று தேவேந்திரனுடைய உலகிற்குப் பாண்டியன் சென்ற நாளில், கைகளில் அந்த அழகிய சக்கரமும், மோதிரமும், மார்பினில் விளங்கும் வேப்பமாலையும் விளங்க, நான் புரியும் ஒப்பற்ற அரசாட்சிக்குக் குற்றமும் தவறுதலும் நேரிடாதபடி செலுத்துக என்று அளிக்கவும்; மக்களைக் காக்கின்ற விரதங்கொண்ட அரசர்களுள் மிகுந்த ராஜ வெகுமதிகளைப் பெறத்தக்க சிறப்பான் மிக்க புகழ்ந்து சொல்லப்பட்ட வேத நூலின் விதிப்படி முன்னின்றோரும்; பாண்டியன் உயர்த்திப் பிடித்த மீனக்கொடியின் மீது, வளைதடியின் உருவம் தீட்டப்பெற்ற தம் கொடியையும் மகாமேரு பருவதத்தில் பொறித்து வைத்துக் கடலால் சூழப்பட்ட உலகில் பாதிக்குக் காவலர்களாக மனுநீதி முறைமைப்படி ஒழுகி விளக்கமுற்ற பெருமை பெற்ற புகழினையுடையவரும்; அரசர்கள் இவர்கள் என்று பாண்டியன் சொல்லவும் அரசுரிமையைக் கொண்டவர்களும், வெற்றியையுடைய வடிக்கப்பட்ட வாளாயுதத்தை யுடையவர்களாய்க் கோட்டைகளைக் கைப்பற்றிக் காவல் புரியும் படை வீட்டவர்களான ஐந்து கோட்டை நாட்டவர்கள் என்னும் மறவர்கள்.

கசு

199652

1934 டிசம்பரில்

வெளிவந்த கழகப் பதிப்புகள்

மேனாட்டு வணிகமன்னர்

இதன்கண் (1) ராக்பெல்லர், (2) ஹென்ரி போர்டு (3) சர் தாமஸ் லிப்டன் முதலிய பன்னிரு உலகப் பெருஞ் செல்வர்களின் வரலாறுகள் அடங்கியன.

படங்களுடன் ராப்பர் விலை அணா 10

போர்க் கருவிகளின் வரலாறு படங்களுடன் அணா 8

SAINT APPAR: HIS LIFE AND TEACHINGS

By M. S. Purnalingam Pillai, B.A., L.T. Price As. 12

நான்மணிக்கடிகை விருத்தியுரை விலை அணா 8

திருமதி நீலாம்பிகையம்மையார் எழுதிப் பதிப்பித்தவை:—

அருஞ்செய லிருவர்

இதன்கண் சிறுத்தொண்டர், திருநீலகண்டர் வரலாறுகள் ஆராய்ச்சியுடன் அடங்கியன. இதன் விலை அணா 5.

பட்டினத்தார் பாராட்டிய மூவர்

இதன்கண் (1) சிறுத்தொண்டர், (2) திருநீலகண்டர், (3) கண்ணப்பர் முதலிய மூவர் வரலாறுகள் ஆராய்ச்சியுடன் அடங்கியன இதன் விலை அணா 14

அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடுகள்

1.	FACTORY LABOUR IN INDIA by Dr. A. Muktar	3	0
2.	BHOJA RAJA by P. T. Sreenivasa Iyengar	1	8
3.	SIVARAMELAKALANIDHI by M. S. Ramaswamy Iyer	2	0
4	MUKUNDAMALA by K. Rama Pisharoti	3	0
5.	TAMIL BOOK on LOGIC (நவீன தர்க்கம்) by K. R. Applachari	2	0

வெளிப் பதிப்புக்கள்

பட்டினத்தார் பிரபந்த விருத்தியுரை	4	0
மெய்கண்ட சாத்திரம் 14 உரையுடன் (சமாஜம்)	3	4

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
6, பவளக்காரத் தெரு, சென்னை.